Z2 N09

117718

383 2/1 ... 8 - JUN 1909 MADRAS

உ

# இந்தியன் லா ரிபோர்ட்டுகள்.

விவகார நுட்பங்களை எளிதில் உணரும் பொருட்டு

பிரசுரிக்கப்படும் ஓர் மாதாந்தப் பத்திரிகை.

புத்தகம் 1. } 1909 ஆம் மார்ச்சுமீ { சஞ்சிகை 1.


| விஷயம். | பக்கம். | விஷயம். | பக்கம். |
|---|---|---|---|
| இராஜதுரோகவார்த்தை | 3 | டிரஸ்ட்டு ஆக்ட்டு | 34 |
| ரெவனியு | 9 | காண்டிராக்ட் ஆக்ட்டு | 35 |
| இந்துலா | 13 | இ. பிரமாணசட்டம் | 35 |
| சிவில் புரிவீஜர் கோடு | 22 | கிரிமனல்புரிவீஜர்கோடு | 36 |
| காலாவதிதோஷசட்டம் | 29 | பெனல் கோடு | 39 |
| சொத்துபராதீனசட்டம் | 31 | முனிசிபால்டி சட்டம் | 40 |



மாயவரம் A. N. S. R. கம்பெனியாரால்

பிரசுரிக்கப்படும்.

---

1,000 காபிகள்.

சென்னை வாணீபூஷணம் பிரஸ்வில்

அச்சிடப்பட்டது.

383

8- JUN 1909

# முகவுரை.

இந்தியன் லாரிபோர்ட்டுகள் என்னும் இந்தத்தமிழ் லா ஜாணலில் இவ்விந்தியா எல்லா ஹைகோர்ட்டுகளிலும் பிரிவி கவுன்ஸிலிலும் நாளது 1909௵ ஜனவரி மாதமுதல் ஏற்படும் லாரிபோர்ட்டுகளை இந்துலா, மகம்மதியலா, சிவில் கிரிமினல் புரிவீஜர் கோடுகள், காலாவதி தோஷசட்டம், சொத்துப்பராதீன சட்டம், முதலிய பலவகை சட்டங்களாகப் பிரித்தும், ஒவ்வொரு லாரிபோர்ட்டின் சாராம்ச மின்னதென அதன் கருத்தை தலைப்பில் எழுதி அதற்குத் தொடர்ந்த நம்பர் இனவாரியாகக் கொடுத்தும், சட்டதாத்பரியங்களை யாவரும் எளிதில் தெரிந்து கொள்ளும் விதமாக எழுதப்படும்.

அந்த லாரிபோர்ட்டுகளின் சுருக்கங்களுக்கு ஆறுமாதங்களுக் கோர்முறை அட்டவணை யெழுதி சந்தாதார்களுக்கு இனாமாகக் கொடுக்கப்படும். அதில் சஞ்சிகை பக்க முதலிய விபரங்களிருக்குமாகையால் சட்டதாத்பரியங்களைத் தெரிந்து கொள்ள விரும்புகிறவர்கள் அதிசீக்கிரத்தில் குறிப்பிட்ட பக்கத்தை யெடுத்து தங்களுக்குரிய சந்தேகங்களை நிவர்த்தித்துக் கொள்ளலாம்.

கக்ஷிக்காரர்களின் பெயர் முதலிய விபரங்களை யெடுத்துச் சொல்வதில் பிரயோஜன மில்லையாகையால் லாரிபோர்ட்டுகளின் முக்கியபாக மட்டில் எழுதப்படும். மற்றப்பத்திரிகைகள் போல் நியாயஸ்தலங்களில் எடுத்துச் சொல்ல வகையற்ற தீர்ப்புகள் யாதொன்றும் இதில் எழுதப்படமாட்டா.

**A. NATESA PILLAI.**
*Pleader,*
And
Managing Proprietor,
A. N. S. R. Company,
MAYAVARAM.

OF THE REGISTRAR
8- JUN 1909
MADRAS

உ

# இந்தியன் லா ரிபோர்ட்டுகள்

சென்னை இராஜதானியில் தமிழ்ப்பாஷை பயின்ற அனைவரும் விவகார நுட்பங்களை எளிதில் உணரும் பொருட்டுப் பிரசுரிக்கப்படும்.

மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம் 1. } மாயவரம்:—1909ஆம் மார்ச்சுமீ { இலக்கம் 1.

## இராஜத்துரோகம். இ. பி. கோடு 124 A.

## SEDITION.

இராஜத்துரோகம் என்ற பதத்துக்கு அடியில்கண்ட விஷயங்களிருக்கவேண்டும்.

(1) யாராவது மாட்சிமைதங்கிய இந்தியா சக்கரவர்த்தி அவர்களுக்காவது சட்டப்படி பிரிட்டிஷ் இந்தியா விலேற்பட்ட ராஜரீகத்துக்காவது விரோதம், அல்லது நிந்தனையான வார்த்தைகளைச் சொல்ல வேண்டும், அல்லது அவ்வித வார்த்தைகள் சொல்லும்படி யேற்பாடு செய்யவேண்டும்;

(2) அல்லது மாட்சிமைதங்கிய இந்தியா சக்கரவர்த்தியவர்களையாவது அல்லது இந்தியா இராஜரீகத்தையாவது வெறுக்கத்தக்க வார்த்தைகளை யுபயோகிக்கவேண்டும், அல்லது உபயோகிக்க எத்தனப் படவேண்டும்;

(3) மேற் சொன்ன வார்த்தைகள் வாய்மொழியாகவாவது எழுத்து மூலமாகவாவது குறிப்பாகவாவது கண்ணுக்குத் தோற்றுகிற பாவனையாகவாவது வேறே யெவ்விதமாகவாவது இருக்கலாம்.

மேற்சொன்ன வார்த்தைகளி லெதையா... தவிதமாயாவது உபயோகிப்பவர்களுக்கு ஆயுள்பரியந்தம் பிறதேசங்களுக்கனுப்புந்தெண்டனை விதிக்கலாம்; அல்லது அதற்குக் குறைவான காலங்களுக்கு பிறதேசங்களுக் கனுப்புந் தெண்டனையுடன் அபராதமும்விதிக்கலாம்; அல்லது 3-வருஷகாலம் வரையில் கடுங்காவல் தெண்டனையுடன் அபராதமும் விதிக்கலாம்; அல்லது அபராதமட்டில் விதிக்கலாம்;

**விளக்கம். 1.** வெறுக்கத்தக்கது என்ற பதத்துக்கு இராஜ பக்தியின்மை யென்றும் பொருள் கொள்ளப்படவேண்டும்.

**விளக்கம். 2.** இராஜாங்கத்துக்கு விரோதமாவது நிந்தனையாவது வெறுப்பாவது உண்டுபண்ணமல் அல்லது அவ்வித விரோதம், நிந்தனை வெறுப்பு உண்டுபண்ண எத்தனப்படாமல் இராஜங்கத்தாரின் சட்டதிட்டங்கள் சரியானதாகவில்லை யென்றும் அவைகள் நியாயப்படி திருத்தல் செய்யப்பட வேண்டுமென்றும், சட்டத்தின் கருத்துகளை விளக்கி ஒருவர் தனது அபிப்பிராயங்களைத் தெரிவிப்பாராகில் அது இந்த செக்ஷன்படி குற்றமாகாது.

**விளக்கம். 3.** இராஜாங்கத்துக்கு விரோதமாவது, நிந்தனையாவது, வெறுப்பாவது உண்டுபண்ணமல், அல்லது அவ்வித முண்டுபண்ண எத்தனப்படாமல் இராஜாங்கத்தின் அரசாட்சி விஷயமாக வாவது, அல்லது அரசாங்க வேறு நடவடிக்கைகளைப் பற்றியாவது, ஒருவர் தனது அபிப்பிராயம் வேறுபட்டிருப்பதாக சட்டங்களை விளங்கித் தெரிவிப்பாராகில் அது இந்த செக்ஷன் படி குற்றமாகாது.

## வியாக்கியானம்.

படைச்சேவகர் கலகம், குழப்பம், கலாதி முதலியவை யேற்பட்டால் தான் இந்த செக்ஷன்படி குற்றமாகுமென்பது கிடையாது; இராஜாங்கத்



தார் மீது கெட்ட வெண்ணங்கொள்ளும்படி. தூண்டுதலும் அவ்விதம் தூண்டவெத்தனப்படுதலும் குற்றமாகுமென்பதற்குத் தடையில்லை (இ. லா. ரி. 22 பம்பாய் 135 பாலகங்காதரதிலகர்)

**யாராவது:**—இராஜதுரோகமான வார்த்தைகள் எழுதுபவர்கள் அந்த ...களையாவது அச்சிடப்பட்ட அந்த எழுத்துக்களையாவது உபயோகிப்பவர்கள் என்று பொருள் கொள்ளப்பட வேண்டும் (இ. லா. ரி. 19 கல்கத்தா 41 ஜோகேந்திர சந்திரபோஸ்.

**எழுதப்பட்டது:**—ஒருவன் இராஜ துரோகவார்த்தைகளை யெழுதி அவைகளைத் தன் கைவசமாகவே வைத்துக் கொண்டிருந்தால் அதுகுற்றமாகாது; அவைகளை வேறொருவருக்கு அனுப்புவதே குற்றமாகும்; அவைகளைப் பெற்றுக் கொள்ளுகிறவன் அவைகளை வாசித்துத்தெரிந்து கொள்ளவேண்டு மென்பது அவசியமில்லை.

**எத்தனஞ் செய்தல்:**—இந்த செக்ஷன்படி குற்றஞ் செய்ய எத்தனித்தல் இன்னதென்பதைத் தெரிந்து கொள்ளுவதற்கு முன் அந்தவார்த்தைகளின் உண்மையான அருத்தம், அவைகள் இன்ன விஷயங்களைப் பற்றிச் சொல்கின்றன, அவைகளின் மறைவான அர்த்தங்க ளென்ன, இவைகளை நன்றாய்த் தெரிந்து கொள்ள வேண்டியதுடன் இராஜாங்கத்துக்கு விரோதம், நிந்தனை, வெறுப்பு, முதலியவற்றை விளைவிக்கக் கூடியதாகவிருக்கின்றனவா வென்பதையுந் தெரிந்து கொள்ளவேண்டும். இராஜ துரோகவார்த்தைகள் எழுதிய அல்லது சொன்னவர்களின் கருத்து என்ன வென்பதையும், அவைகள் குற்றமாகு மென்பதையும் அவைகளாலுண்டாகுங் கெடுதிகளையும், காலதேச வர்த்தமானங்களைக் கொண்டு நிஷ்கரிக்கவேண்டும்.

இராஜாங்கத்தாரின் நடவடிக்கைகள் பொதுஜனக்ஷேமங்களுக்குக் கெடுதலாக விருக்கிறதென்றுவது, கெடுதிகளை விளைவிக்கக்கூடியதாக விருக்கிறதென்றுவது ஒருவர், உண்மையாக நம்பி நல்ல எண்ணத்துடன் வார்த்தைகள் சொன்னாலும் அவைகள் இராஜாங்கத்தாரை வெறுக்கவோ நிந்திக்கவோ, விரோதிக்கவோ, செய்யுமாகில் அவைகள் இந்த செக்ஷன்படி குற்றமாகும். (2 பம்பாய். லாரிபோர்ட்டு 304.)

இந்தியன் பெனல் கோடில் நியாயவிரோதமான லாபம், நியாயவிரோதமான நஷ்டம், நெறிதவறுதல் முதலிய பதங்களுக்கு வியாக்கியானங்களெழுதப்பட்டிருக்கின்றன. அவைகளைப்போல் ஷை இ. பி. கோடு 124 A. 154 A, இந்த செக்ஷன்களில்கண்ட விரோதம், நிந்தனை, வெறுப்பு, இந்த 3-பதங்களுக்கும் வியாக்கியானங்கள் சொல்லப்படவில்லை; இதனால் இந்த செக்ஷன்களின்படி போலீசாரால் கொண்டுவரப்படும் கேஸ்களில் பலர் கடுந்தெண்டனைக்குள்ளாக்கப்பட்டுவருகிறார்கள். மேற்கண்ட 3 வார்த்தைகளுக்கும் என்னென்ன அர்த்தங்களிருக்கின்றனவென்பதை கவனிப்போம்.

**விரோதம்:**—சத்துரு, பகை, எதிரி, வன்மம், குரோதம், பொருமை, அழுக்காறு.

**நிந்தனை:**—இகழ்ச்சி, அலக்ஷியம், அசட்டை, ஏளனம், உதாசீனம்.

வெறுப்பு:—பேதம், பேதிப்பு, பிணக்கு, விரக்தி.

மேற்கண்ட 3 வார்த்தைகளுக்கும் பலவித அர்த்தங்களிருப்பதால் அப்பதங்களுக்கு எந்தெந்த விதம் அர்த்தஞ் செய்கிறதென்று நியாயாதிபதிகள் திகைப்பதற்கிடமாயிருப்பதுமன்றி எதிரிகள் எந்தெந்த விதஞ் சொல்லி தப்பித்துக் கொள்ளலாமென மனங்கலங்கவு மேதுவாயிருக்கிறது. அன்பில்லாதிருத்தல் விரோதமெனவும், மரியாதையுடன் நடத்தாதிருத்தல் நிந்தனையெனவும், பக்ஷமாய் நடத்தாதிருத்தல் வெறுப்பு எனவும், சில நியாயாதிபதிகள் அர்த்தஞ் செய்கிறார்கள்.

1898௵த்துக்கு முந்தி இராஜாங்கத்தார் பேரில் வெறுப்பு என்பதுமட்டில் இந்த 124 A, செக்ஷனில் சொல்லப்பட்டிருந்தது; அவ்வருஷத்தில் வெறுப்பு என்ற பதத்துடன் விரோதம் நிந்தனை என்ற இரண்டு பதங்களையுஞ் சேர்த்துவிட்டார்கள். இவ்விதஞ் செய்தது முன்னிருந்த சந்தேகங்களை பின்னும் விருத்தி செய்துவிட்டது. இது விஷயங்களை யறிந்த பார்லிமெண்டு மெம்பர் கனம் ஓகிரேடி துரையவர்கள் சென்ற 1908௵ மார்ச்சுமாதம் 10௳ கூடிய பார்லிமெண்டு சபையிலே இந்தியா மந்திரி வைகவுண்டு ஜான்மார்லிதுரையவர்களைப்பார்த்து அடியில்கண்ட கேள்விகள் கேட்டார்கள்.



(1) இந்தியன் பெனல் கோடில்கண்ட இராஜதுரோகம் என்ற குற்றத்தின்கீழ் போலீசார் சொல்லும் இராஜதுரோகமென்னும்வார்த்தைகள் பிரசுரஞ் செய்ததற்காக இந்தியாவிலுள்ள அனேக பத்திராதிபர்களும் பத்திரிகைகளை அச்சிட்டவர்களும் பெரும்பாலும் ஜாஸ்திகாலங்களுக்கு கடுந்தெண்டனை விதிக்கபெற்றதுடன் ஏராளமான தொகை யபராதமும் போடப்பட்டிருக்கிற விபரம் தங்களுக்குத் தெரியுமா?

(2) அந்த கேஸ்கள் பெரும்பான்மையும் தேசபக்தி விஷயமாக வேற்பட்டிருக்க அவைகள் இராஜதுரோகமானவையென்று நடவடிக்கைகள் நடத்தியிருக்கிறார்களல்லவா?

(3) அந்த செக்ஷன்படி குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் அனேகமா யெல்லோரும் சிறுவர்களல்லவா?

(4) அவர்களில் பலர் இருபது வயதுக்குள்பட்டவர்களல்லவா?

(5) இவ்விதம் பத்திராதிபர்கள் முதலியவர்கள் பேரில் கவர்ன்மெண்டார் நடவடிக்கைகள் நடத்துவது இந்தியபொது ஜனங்களுக்கு இராஜாங்கத்தாரிடத்திலிருக்கும் நம்பிக்கைகளை கெடுப்பதுமன்றி அவர்களுக்குள்ள குறைகளை தைரியமாக எடுத்துச் சொல்லத் தடை செய்கிறதல்லவா?

(6) இவ்விஷயங்களை யெல்லாம் ஆலோஜித்து பெனல் கோடிலுள்ள இராஜதுரோகம் என்ற பதத்தின் அருத்தத்தை விளங்கச் செய்யும்படிக்காவது அல்லது அந்தச் சட்டத்தைத் திருத்தஞ் செய்யும்படிக்காவது ஏற்பாடு செய்வீர்களா?

இந்தக் கேள்விகளுக்கு வைகவுண்டு மார்லிதுரையவர்கள் அடியில்கண்ட பதில்சொன்னார்கள். என்னுடைய கனம்பொருந்திய சிநேகிதர் அவர்கள்என்னை யெந்த விஷயத்தைப்பற்றிக் கேட்கிறார்களோ அவ்விஷய மின்னதென்று அவர்கள் சரியாய்த் தெரிந்துகொள்ளவில்லை; இராஜதுரோகம் என்ற வார்த்தை பெனல் கோடில் சொல்லப்படவில்லை; இராஜதுரோக வார்த்தை யென்று போலீசார் சொன்னபடி யாதொருவருந் தெண்டிக்கப்படவில்லை; சட்டப்படி நியமிக்கப்பட்ட நியாயாதிபதிகளால்தான் தெண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்; இந்தக் கேஸ்களில் சில இந்தியா ஜூரிக

னால் விசாரிக்கப்பட்டிருக்கின்றன; குற்றவாளிகள் சட்ட விரோதமான காரியங்களைச் செய்திருப்பதாக ஷை ஜூரிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள்; குற்றபத்திரிகையில்கண்ட எல்லா விஷயங்களும் ஷை சட்டத்தில் விபரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது; அதைப்பற்றி விசாரிக்கச் செய்யவேண்டிய அவசியம் யாதொன்றுமில்லை; அந்த சட்டத்தில்கண்ட வாசகங்களின்படி யாராவது ஒருவகுப்பு ஜாதியார் மற்றொருவகுப்பு ஜாதியாரிடத்தில் விரோதம், நிந்தனை, வெறுப்பு, இவைகளை யுண்டுபண்ணாமல் இராஜாங்கத்தாரிடத்தில் விசுவாச முடையவர்களாய் தங்களுக்குள்ள குறைகளை யெடுத்துச் சொல்வார்களானால் அவர்கள் தொந்திரவுக்குட் படுத்தப் படமாட்டார்களென்று நிச்சயமாய்ச் சொல்லுகிறேன்.

மேற்கண்ட கேள்வி ஜவாப்புகளில் எவை யெவை பொருத்தம் எவை யெவை பொருத்தமில்லை யென்ற விபரங்களை இதனை வாசிப்பவர்கள் நன்றாய்த் தெரிந்து கொள்வார்களாகையால் நான் சொல்ல வேண்டியது அனாவசியம்.

மேற்கண்ட வெறுப்பு, விரோதம், நிந்தனை, என்ற 3 வார்த்தைகளுக்கும் பதப்பொருள்களை விளங்கியும், இந்த செக்ஷன்படி தெண்டனைக்குள்ளாக்கப் படுகிறவர்கள் பெரும்பாலும் தக்கவந்தஸ்தும் யோக்கியதையுமுடையவர்களா யிருப்பதாலும் இவர்கள் இராஜாங்கக் கைதிகளாயிருப்பதாலும் இரண்டு வருடங்களுக்கு மேற்படாத வெறுங்காவல் மட்டில் விதிக்கப்படலா மென்றும், இந்த 124 A, 154 A இரண்டு செக்ஷன்களிலும் திருத்தங்கள் செய்யப்படவேண்டுமென்றுநமது காருண்ணிய இராஜப்பிரதிநிதியவர்களுக்குவிண்ணப்பஞ் செய்து கொள்ளவேண்டியது நம்மவர்களின் முக்கிய கடமைகளி லொன்று.

# இந்தியன் லா ரிபோர்ட்டுகள்.

## ரெவனியு சட்டங்கள்.

**ரெவனியு ஏலத்திலெடுத்த நிலங்கள் வசப்படுத்த காலாவதி தோஷம்.**

கும்பகோணந் தாலுக்காவின் ஓர் கிராமத்திலுள்ள சில நிலங்களை பஞ்சநதம்பிள்ளை யென்றவர் 1902௵ ஜூன் ௴ 12௳யில் ஏலமெடுத்து அந்நிலங்களை ஸ்வாதீனப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று ரெவனியு வரி வசூல் சட்டம் 40-வது செக்ஷன்படி 1903௵ ஜூன் ௴ 15௳யில் கும்பகோணம் டி. மு. கோர்ட்டில் மனுக்கொடுத்தார். அந்த மனு நடவடிக்கைகளுக்கு கட்டளை பிறப்பிவிக்க படி கட்டப்படாததால் ஷை ஜூன் ௴ 19௳யில் மனுதள்ளுபடி செய்யப்பட்டது. பிறகு 1905௵ நவம்பர் ௴ 24௳யில் மனுக்கொடுத்து கவுண்டர் மனுதாரனாகிய பூமிக்குடையவருக்கு நோட்டீஸ்போனவுடன் அவர் ஷை வசப்படுத்து மனுவுக்கு காலாவதி தோஷ மேற்பட்டுவிட்ட தென்றும், அம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும், ஆக்ஷேபித்தார். முதலில் கொடுத்த மனுத் தேதிக்கு 3 வருடங்களுக்குள் இந்த மனு கொடுபட்டிருப்பதால் காலாவதி தோஷ சட்டம் 2-வது ஷெடியூல் 179-வது ஆர்டிகிள்படி காலாவதி தோஷமில்லை யென்று டி. மு. கோர்ட்டார் உத்திரவு செய்தார்கள் அதைப்பற்றி டிஸ்டிரிக்ட் கோர்ட்டுக்கு அப்பீல் செய்ததில் கீழ் கோர்ட்டார் செய்த வுத்திரவை யுறுதி செய்து விட்டார்கள். கீழ் கோர்ட்டார்கள் இருவருஞ் செய்த தீர்ப்புகள் சட்ட விரோதமானவை யென்று கவுண்டர் மனுதார் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார்.

1864௵த்திய II-வது ஆக்ட்டு 36-வது செக்ஷன்படி ஏலவிற்று முதல் செய்யப்பட்ட சொத்தை ஷை ஆக்ட்டு 40 வதுசெக்ஷன்படி சிவில் கோர்ட்டு மூலமாக வசப்படுத்துவதற்கு மேற்சொன்ன 179-வது செக்ஷன் ஒற்றுமையானதல்ல வென்றும், அது சிவில் கோர்ட்டு டிக்கிரிகள் அல்லது உத்திரவுகள்

நிறைவேற்றப் படுவதற்காக வேற்பட்டதென்றும், ரெவனியு ஏல நடவடிக்கைகளுக்கு 178-வது ஆர்டிகில்தான் ஒற்றுமையான தென்றும், ஷெ ஏலதேதிமுதல் 3-வருடங்களுக்கு மேற்பட்டு விட்டதால் வரப்படுத்த காலாவதி ஷெ மேற்பட்டு விட்டதென்றும், உத்திரவு செய்யப்பட்டது.

31 சென்னை 24 சாம்பசிவ முதலியார் அப்பீல் வாதி:—பஞ்சசதம்பிள்ளை அப்பீல் பிரதிவாதி.

2 தர்ம சொத்துக்களுக்கு கொடுபட்ட வரியிறைமை ரத்து செய்ய கவர்ண்மெண்டாருக்குள்ள பாத்தியம்

மதுரை ஜில்லா திண்டுக்கல் பட்டணத்தில் சுமார் 200-வருடங்களுக்கு முன்னிருந்த பர்கி வெங்கட்ராவ் என்பவர் ஒரு சத்திரங்கட்டிவைத்து அதில் பிராமணர்களுக்கு அன்னதானஞ் செய்துவர சில பூஸ்திதிகளு மேற்படுத்திவைத்தார். ஷெ தர்மங்களை யுத்தேசித்து ஷெ சத்திரம் அதற்கேற்பட்ட பூஸ்திதி இவைகளுக்கு வரிவஜா செய்யப்பட்டு இனம் கமிஷனரால் இனம் பட்டாவுங் கொடுபட்டது. அந்த இனம் எந்தக் கருத்துடனேற்பட்டதோ அதன்படி கருமங்கள் நடத்தப்படவில்லையென்று அந்த இனத்தை ரத்துசெய்து 1900௵ பிப்ரவரி ௴ 13௳யில் ஷெ நிலங்களுக்கு பூராத்தீர்வை மேற்படுத்திவிட்டார்கள். இந்தப்படி செய்தது சட்ட விரோதமானதென்று ஷெ சத்திரம் தர்மகர்த்தா திண்டுக்கல் டி. மு. கோர்ட்டில் கவர்ண்மெண்டாரவர்கள் பேரில் பாத்தியஸ்தாபன வழக்குக் கொண்டுவந்தார்.

நிலவரி சம்பந்தமான விஷயங்களைப்பற்றி முடிவு செய்ய சிவில் கோர்ட்டாருக்கு அதிகாரமில்லை யென்பதாக 1871௵த்திய பென்ஷன் சட்டம் 4-வது செக்ஷனை தங்களுக்கு ஆதாரமாகக் காட்டினார்கள். வாதி பிராதுப்படி டி. மு. கோர்ட்டார் செய்த தீர்ப்பு டிஸ்டிரிக்ட் கோர்ட்டாரால் மாற்றப்பட்டது. அதன்பேரில் வாதி ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார்.

ஷெ பென்ஷன் சட்டம் 4-வது செக்ஷன் நபர்களைப் பொருத்த இனம் சொத்துகளைப் பற்றிச் சொல்லப்பட்டதென்றும்,



பொதுதர்ம சொத்துக்களைப்பற்றிச் சொல்லப்பட்டதல்ல வென்றும், வாதியின் தாவாவைப்பற்றி விசாரிக்க சிவில் கோர்ட்டாருக்கு அதிகாரமிருக்கிறதென்றும், 6 சென்னை 361, 11 சென்னை 283, இந்த ரூலிங்கிஸ்களை யனுசரித்துத்தீர்ப்பு செய்யப்பட்டது.

31 சென்னை 12 வெங்கடேசய்யர் அ. வாதி:—இந்தியா செகரடரியவர்கள். அ பிரதிவாதி.

3 புஞ்சை நிலத்தில் இரண்டாம்போக சாகுபடிக்கு ஜாஸ்தி வசூலிக்க ஜமீன்தார்க்குள்ள பாத்தியம்.

மதுரை டிவிஷன் டிப்டிகலெக்டர் அதிகார வரம்புக்குள்பட்ட ஒரு ஜமீன் கிராமத்திய குடி குமாரு ரெட்டியார் தன்னுடைய புஞ்சை நிலத்தில் இரண்டாம் போக சாகுபடி செய்ததற்காக ஜமீன்தார் ஜாஸ்திவரி யேற்படுத்தி 1313-ம்பசலி கிஸ்திக்காக ஷெ குடியானவனுடைய சொத்துக்களை ஜப்தி செய்தார். சட்டவிரோதமாக வரியேற்படுத்தி ஜப்தி செய்திருப்பதால் அது ரத்து செய்யப்பட வேண்டுமென குமார ரெட்டியார் தன்னுடைய ஜமீன்தார் பேரில் சம்மரி வழக்கிட்டார். வாதிக்கு விரோதமாக டிப்டிகலெக்டரும் டிஸ்டிரிக்ட் ஜட்ஜியும் தீர்ப்பு செய்துவிட்டதால் வாதி ஹைகோட்டுக்கு அப்பீல்செய்தார்,

புஞ்சை நிலங்களுக்கு இரண்டாம் போகவரி வசூலிக்கும் வழக்கத்தைப்பற்றி ஜமீன்தார் திருப்திகரமாய் ருஜூப்பிக்கவில்லையென்றும், அவ்வித வரிகள் கேட்டதாகமட்டில் தஸ்தா வேஜ்கள் தாகல் செய்யப்பட்டிருக்கிறதே யன்றி அவ்வரிகள் கொடுபட்டதாக யாதொரு தஸ்தாவேஜுகளுமில்லை யென்றும், வாதியின் தாவாப்படி ஜமீன்தார் செய்த ஜப்தி விடுதலை செய்யப்பட்டது.

31 சென்னை 17 குமாறரெட்டி அ வாதி—நாகய்யசாமி தம்பாச்சி நயாக்கர் அ பிரதிவாதிகள்.

வெற்றிலைக் கொடிக்காலுக்கு ஜாஸ்தி வரி வசூலித்தல்.

மதுரை டிவிஷன் டிப்டிகலெக்டர் அதிகார வரம்புக்குள்பட்ட ஜமீன் ஓர் கிராமத்தில் சுப்பபிள்ளை யென்பவன் 78 செண்டு நிலம் வெற்றிலை சாகுபடிசெய்திருந்தார். அந்த நிலத்துக்கு ஜமீன்தார்

ரூ 127—4—4, தீர்வை விதித்து அத்தொகை கொடாததற்காக ஷை சுப்பபிள்ளையின் சொத்துக்களை ஜப்திசெய்தார். ஷை வரி அக்கிரமமானதென்றும் ஜமீன்தார் செய்த ஜப்தி விடுதலைசெய்யப்படவேண்டுமென்றும் சம்மரிவழக்கிட்டார். டிப்டிகலெக்டரும் டிஸ்டிரிகட் ஜட்ஜியும் வாதிக்கு விரோதமாக தீர்ப்பு செய்துவிட்டதால் வாதி ஹைகோர்ட்டுக்கு அப்பீல்செய்தார்.

வெற்றிலை சாகுபடியாவது வேறெந்த பயிராவது குடியானவர்கள் செய்தால் அந்த மகசூல்களை பங்குவீதப்படி பாகித்து எடுத்துக்கொள்ள ஜமீந்தாருக்கு பாத்தியமிருக்கிறதென்றும், அந்தப்படி வெற்றிலை மகசூலைபார்த்துக் கொண்டால் ஜமீன்தாருக்கு ஜாஸ்தி லாபங்களுண்டென்றும், சிலவு சவுகரியங்களை யுத்தேசித்து ஜமீன்தாருக்குச் சேரவேண்டிய மேல்வார மகசூல்களுக்கு கிரய மேற்பட்டு வசூலிக்கப்பட்டு வருகிறதென்றும், இந்த வழக்கம் வெகு நீண்டகாலமாக அதாவது 1818௵ முதல் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறதென்றும், வெற்றிலைக் கொடிக்கால்களின் வரிகள் முகுந்தன் என்பவனால் பலபேர்களிடத்தில் வசூலிக்கப்பட்டு ஜமீன்தாருக்கு மொத்த தொகையாகச் செலுத்துவது மாமூல் வழக்கமென்றும், ஜமீன்தார் செய்த ஜப்தியை விடுதலை செய்ய நியாயமில்லை யென்றும், வாதியின் அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டது.

31 சென்னை 19 சுப்பபிள்ளை அ. வாதி—நாகய்யாசாமி தம்பாச்சி நாயக்கர் அ. பிரதிவாதி.

**5 செல்ல வேண்டிய தொகைக்குமேல் ஜாஸ்தியான கிஸ்தித் தொகைக்கு ஜப்தி செய்தல்.**

மதுரை ஜில்லா சிவகெங்கை ஜமீனைச் சேர்ந்த திருபுவனம் கிராமத்திய குடியானவன் பெரிய கருப்பபிள்ளை யென்பவர் வாழை முதலிய பயிர்கள் செய்ததற்காக ஜமீன்தார் ஜாஸ்திவரி யேற்படுத்தி பட்டா கொடுத்தார். குடியானவன் வரிவில்லாததால் நேரில் சர்வாகவில்லை. அந்த கிஸ்தித் தொகை கொடாததற்காக பெரிய கருப்பபிள்ளையுடைய சொத்துக்கள் ஜப்தி செய்யப்பட்டன. ஷை ஜாஸ்திவரி சரியானதல்ல வென்றும், ஜப்தி விடுதலை செய்யப்பட வேண்டுமென்றும், சம்மரி வழக்கிட்டதில் ஹைட்



அஸிஸ்டெண்டு கலெக்டர் அவ்வரிகளில் சிலதைக் குறைத்து பாக்கித் தொகையைப் பற்றின வரையில் ஜப்திஊர்ஜிதமென்று தீர்புச் செய்தார். அதைப்பற்றி வாதி டிஸ்டிரிக்ட் கோர்ட்டுக்கு அப்பீல் செய்ததில் அந்த ஜட்ஜி பின்னும் சில தொகைகளைத் தள்ளி பாக்கித் தொகையைப் பற்றின வரையில் ஜப்தியை யூர்ஜிதஞ் செய்தார். இந்த தீர்ப்பு சரியானதல்ல வென்றும், ஜப்தி விடுதலை செய்யப்பட வேண்டுமென்றும், ஹைகோர்ட்டுக்கு வாதி அப்பீல் செய்தார்.

வாதிதனக்கு ஆதாரமாக எடுத்துக் காட்டிய 26 சென்னை 260 நெ. தீர்ப்பு தாவா கேசுக்கு ஒற்றுமையானதல்லவென்றும், அது வலம் ரத்து செய்யப்பட வேண்டிய விஷயமாக வேற்பட்ட பிராதென்றும், தாவா கேஸ் ஜப்தி விடுதலை செய்யப்பட வேண்டியதற்காக வேற்பட்டதாகையால் இது வரவேண்டிய தொகைக்கு ஒரு ஜாமீனாக விருக்கவேண்டியதற்காக வேற்பட்டதென்றும், பட்டாவில்க்கண்ட தொகை பிசகென்று சொல்லப்படுகிறதேயன்றி பட்டாவை மாற்றவில்லை யென்றும், கீழ் கோர்ட்டார் செய்த தீர்ப்பு உறுதி செய்யப்பட்டது.

31 சென்னை 20 பெரிய கருப்பபிள்ளை அ. வாதி—சிவகெங்கை ஜமீன் குத்தகைதார் மானேஜர் அ. பிரதிவாதி.

## ஹிந்துலா

**1. ஸ்விகாரத்தை ஸ்தாபித்து சொத்து ஸ்வாதீனமாக வேண்டுமென்று கோண்டுவரப்படும் வழக்குக்கு காலாவதி தோஷம்:**

A என்றவனுக்கு B, C என்ற இரண்டு பெண்சாதிகள்; A இறந்த பின்பு 1890௵த்தில் C தன்புருஷன் பரலோக சாதகத்தின் பொருட்டு D யை ஸ்வீகாரஞ் செய்து கொண்டாள். பின்பு ஷை விதந்துகளுக்கும் ஸ்வீகாரப் பிள்ளைக்கும் ஒற்றுமையில்லாததலால் அவர்கள் புருஷன் சொத்தில் D பிரவேசிக்க வொட்டாமல் தடை செய்து தாங்கள் இருவரும் அவைகளை 1894௵த்தில் சமபாதியாகப் பிரித்து அனுபவித்தார்கள். D தனக்குள்ள பாத்தியம் ஸ்தாபிக்கப்பட்டு A யுடைய சொத்துக்கள் B, C இவர்களிடமிருந்து கிடைக்க வேண்டுமென 1906௵த்தில் வழக்கிட்டார்.

எதிர்வாதம்:—தாவா சொத்துக்களை B, C இருவரும் D யின் பாத்தியதைகளை மறுத்து 1894௵ முதல் அனுபவித்ததாகவும், அவைகளின் பட்டா தங்கள் பேரால் மாற்றப்பட வேண்டுமென்று D யின் பாத்தியதைகளுக்கு விரோதமாக 1897௵த்தில் ஆக்ஷேபித்திருப்பதாகவும், அது முதல் 6-வருடங்களுக்குள் கொண்டு வரப்படாத இந்த தாவா காலாவதி தோஷசட்டம் 119-வது ஆர்டிகிள்படி தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றுங் கூறியாடினார்கள்.

தீர்ப்பு:—காலாவதி தோஷசட்டம் 118, 119-வது ஆர்டிகிள்கள் ஸ்வீகாரஞ் செல்லும்படியுள்ளது அல்லது செல்லாது என்ற பாத்தியஸ்தாபன வழக்குகளுக்கு ஏற்பட்டனவேயன்றி ஸ்வீகார பாத்தியதையை யனுசரித்து சொத்துஸ்வாதீனங் கிடைக்க வேண்டுமெனக் கொண்டுவரப்படும் வழக்குகளுக்கு ஏற்பட்டனவல்லவென்றும், பிரதிவாதிகள் எந்தத் தேதிமுதல் தாவா சொத்துக்களை அனுபவித்து வருகிறார்களென்பதை ருஜுக்களை விளம்பி தீர்ப்பு செய்ய வேண்டுமென்றும், 26 சென்னை 291 ரூலிங்கிசை யனுசரித்துத் தீர்ப்பு செய்யப்பட்டது.

32 பம்பாய் 7 லெக்ஷ்மண கோம்பாஸப்பாவு அ. வாதிகள்:—ருமப்பா பின் எல்லப்பா குச்ரட்டியாவர்களுவு அ. பிரதிவாதிகள்.

2. அனந்தர வார்சுக்கிரமப்படி சொத்துகிடைக்க வேண்டுமென்று வழக்கிடுகிறவன் இறந்தவன் அபரக்கிரியைச் செலவுகளை அச்சொத்தினின்றும் கொடுக்கக் கடமைப்பட்டவன் என்பது.

A இறந்த காலத்தில் அவருக்கு குமாரன B பெண் C பெண் ஜாதி D இவர்கள் இருந்தார்கள். பின்பு B, C இருவரும் இறந்து விட்டார்கள். D க்கு வேறே சந்ததியில்லாததால் தன்புருஷன் சொத்தாகிய கடை யொன்றை தன் பெண் C யின் மகன் E க்கு 1889௵த்தில் உயில் மூலமாகக் கொடுத்துவிட்டு 1900௵த்தில் இறந்தாள்; அவளுடைய அபரக்கிரியைச் செலவுகளெல்லாம் E யால் நடத்தப்பட்டது; ஷை A க்கு சமீப தாயாதியாகிய F அனந்தர வார்சுக்கிரமப்படி தனக்கு ஷை கடை கிடைக்க வேண்டுமென E பேரில் வழக்கிட்டார்.



எதிர்வாதம்:—தாவா கடை 1862௵த்தில் நெருப்புப்பற்றி எரிந்து விட்டதால் B தன் சொந்தச் செலவில் பழுது பார்த்திருப்பதாகவும் B யின் உத்திரகிரியைகளுக்கு தான் ரூ. 1250 செலவிட்டிருப்பதால் அத்தொகையை கொடுத்தாலன்றி வாதிக்கு சொத்து கிடைக்கமாட்டாதென்றும் E கூறியாடினான்.

தீர்ப்பு:—தாயின் அபரக்கிரியைகளைச் செய்ய பிள்ளை கடமைப்பட்டவனென்றும், பிள்ளையின் சொத்துக்கள் அச்செலவுகளுக்குக் கட்டுப்பட்டவை யென்றும் சமீபதாயாதியும் தாவா சொத்துக்களை யடைய பாத்தியஸ்தனுமான வாதி அந்த கிருத்தியங்களைச் செய்ய வேண்டியவனென்றும், அவன் செய்யாததால் அச்செலவுகளை பிரதிவாதியால் செலவழிக்கப்பட்டதென்றும், இந்து லாவில் சொல்லப்படும் நியாய சம்பத்வா (nyayasa-myatwa = purity of reasoning) என்ற நியாயப்படி பிள்ளையின் சொத்துக்கள் தாயாருடைய கிருத்தியச செலவுகளுக்குக் கட்டுப்படக் கூடியவை யென்றும், ஆகையால் அச்செலவு தொகைகளை வாதி கோர்ட்டில் கட்டிவிட்டு தாவா சொத்துக்களை யடைய வேண்டியதென்றுந் தீர்ப்பு செய்யப்பட்டது.

32 பம்பாய் 26 விருஜ் பூகன்தால் தவார்க்க தாஸ் அ. வாதி:—பாய் பார்வதி அ. பிரதிவாதி.

3 ஸ்திரீகளின் வியபசார தோஷமும் அவர்கள் கொண்டாடும் வார்சு பாத்தியங்களும்.

A இறந்த காலத்தில் B என்ற இரண்டு வயதுள்ள குமாரனும் மனைவி C யும் இருந்தார்கள். C தன் குமாரனுக்குக் கார்டியனாக விருந்து வந்ததில அவன் சொத்துக்களை பரிபாலித்துவர ஒரு நாயக்கனை ஏஜண்டாக நியமித்திருந்தாள். B ஷை நாயக்கனால் கொலை செய்யப்பட்டதாக ஏற்பட்ட தீர்ப்பில் C ஷை நாயக்கனுடன் நிரேக சம்பந்தப் பட்டதினிமித்தம் அவ்வித கொலை நடந்ததாகவும் ருஜுக்கள் ஏற்பட்டன. இந்த ஆதாரத்தைக் கொண்டு A யுடைய சகோதரி குமாரன் D தான் A B இருவருக்கும் நேரான அனந்தரவாரிசென்றும், C மேற்குலத்தவனுடன் நிரேக சம்பந்தப்பட்டு விட்டதாலும் அவனைக் கொண்டு தன் மகனை கொலை செய்யும்படி திட்டஞ்செய்தது

னும், அவள் ஜாதி பிரஷ்டியாய் விட்டாளென்றும் பிள்ளையின் சொத்துக்கு பாத்திய முடையவளாக மாட்டாளென்றும், அவள் வசமுள்ள b யின் சொத்துக்கள் தனக்கு கிடைக்க வேண்டுமென்றும், D வழக்கிட்டார்.

எதிர்வாதம்:—பிராதில் கண்ட விஷயங்கள் பொய்யென்றும், இறந்த குமாரன் B யின் சொத்துக்களை யடையதானே நேரானவாரிசென்றும், C கக்ஷியாடினாள்.

தீர்ப்பு:—வியபசார தோஷமுள்ள விதந்துகள் தன் புருஷன் சொத்திலுள்ள பாத்தியங்களை இழந்துவிட வேண்டுமென்று ஸ்மிருதியில் சொல்லப்பட்டிருக்கிறதே யன்றி அதில் பிள்ளையின் சொத்துக்களை வியபசாரியாய்ப் போய் விட்டதாய் அடையக்கூடாதென்று சொல்லப்படவில்லை யென்றும், ஜாதி பிரஷ்டமாய் போய் விடுவதைக் கொண்டு ஒருவனுக்குள்ள சொத்து பாத்தியம் விலகமாட்டாதென்பதாக 1850௵த்திய 21-வது ஆக்ட்டு ஏற்பட்டிருப்பதாகவும், C கீழ் குலத்தவனுடன் சம்பந்தப்பட்டு ஜாதி பிரஷ்டையாய் போய் தன் மகனுக்குரிய கிரிகைகளைச் செய்ய அருகதையற்றவளாகி விட்டதைக் கொண்டு தன் மகன் சொத்தில் தனக்குள்ள பாத்தியங்களை யிழந்துவிடமாட்டாளென்றும், பிள்ளை சொத்துக்களை தாயார் அடைவது உதிர சம்பந்தமான பாத்தியமே யன்றி விதந்து பாத்திய மல்லவென்றும், அவள் தன் மகனை கொலை செய்துவிடும்படி தூண்டுதல் செய்தாளென்பதற்கு எவ்வித ருஜுவுமில்லை யென்றும், B யின் சொத்துக்களை யடைய அவளே நேரான பாத்திய முடையவளென்றும் D யின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

31 சென்னை 100 வேதம்மாள் அ. வாதி:—வேதநாயக முதலியார் அ. வாதி.

4 விதந்து செய்யும் பராதீனமும் அனந்தர வாரிசு பாத்தியமும்.

தாவா:—A என்ற விதந்து ரூ 1500 பெறுமானமுள்ள தன் புருஷன் சொத்துக்களை அகாரணமாக ரூ 540-க்கு



B க்கு விற்று விட்டதாகவும், அந்த பராதீனங்கள் எவ்விதத்திலும் செல்லத்தக்கதல்லை யென்றும், உண்மையில் புருஷன் கடன்பட்டிருந்தாலும் அதை வேறுவகைகளில் நிவர்த்திக்க வேண்டியதென்றும், ஆகையால் அப்பராதீனங்கள் ரத்து செய்யப்பட வேண்டுமென்றும், A B இருவர் பேரிலும் அனந்தரவாரிசு வழக்கிட்டார்.

எதிர்வாதம்:—புருஷனுடைய கடன்களை தீர்க்கவேண்டியதற்காகவும், அவருடைய அபரக்கிரியைகளை நடத்திய செலவுகளுக்காகவும், மற்றுஞ் சில அவசியமான செலவுகளுக்காகவும், விற்கப்பட்டதேயன்றி மோசடியாக பராதீனங்கள் செய்யப்படவில்லை யென்றும், வேறுவிதங்களில் மேற்படி கடன்களை நிவர்த்திக்க வேண்டிய அவசியமில்லை யென்றும், A B இருவரும் கக்ஷியாடினார்கள்.

தீர்ப்பு:—விதந்துகள் அனந்தர வாரிசுகளுக்கு டிரஸ்டிகளாக மாட்டார்களென்றும், A தன் புருஷன் சொத்துக்களை பெந்தகம் வைத்தாவது, வேறுவகையில் கடன்வாங்கியாவது தன் புருஷன் கடன்களை பரிகரிக்கக் கடமைப்பட்டவளல்ல வென்றும், சாசனத்தில்கண்ட கடன்கள் கிரமமான தென்றும், குறைந்த விலைக்கு விற்கப்பட்டது என்ற ஒரு காரணத்தினால் மட்டில் அக்கிரமத்தை ரத்து செய்ய நியாயமில்லை யென்றும், தாவா சொத்துக்கள் ரூ 1000 பொருமென்றும், சாசனத் தொகை ரூ 540-ம் வாதி தான் கொடுத்து விடுவதாக பிராதில் சொல்லாததால் இந்த தாவா நிற்கத்தக்கதல்லவென்றும், வாதியின் பிராது தள்ளுபடி செய்யப்பட்டது.

31 சென்னை 153 சிங்கனி செட்டி சங்கினி கண்டயா அ. வாதி:—திரௌபதி பயாணிவு அ. பிரதிவாதிகள்.

5. பெண்ணின் பிள்ளைக்கும் அனந்தரவாரிசுக்குமுள்ள பாத்தியா பாத்தியங்கள்.

A இறந்த காலத்தில் அவருக்கு விவாகமாகாத பெண் B யும் விதவை C யும் இருந்தார்கள். அவர் தன்னுடைய வம்ச விருத்தியின் பொருட்டு தன் மனைவி அவளுக்குப் பிரியமுள்ள ஒரு பையனை தனக்கு ஸ்வீகாரமாக எடுத்துக் கொண்டு தன்

னுடைய பரலோக சாதகங்களுக்குரிய கருமங்களைச் செய்து தன்னுடைய சொத்துக்களை யடையச் செய்கிற தென்றும், அவ்விதம் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளா திருந்து தன் பெண் B க்கு ஆண் சந்ததி யுண்டாகும் பட்சத்தில் அவன் தனக்குரிய கருமத்தைச் செய்யக்கடமைப் பட்டவனாகையால் அவனே தன்னுடைய சொத்துக்களை யடைகிற தென்றும், உயில் எழுதி விட்டு இறந்தார். விதவை C யாதொருவரையும் ஸ்வீகாரஞ் செய்து கொள்ளாமலே 1893ஷு த்தில் இறந்தாள். அதற்கு முன்பாகவே B க்கு D என்ற பிள்ளை பிறந்திருந்தான். B 1902ஷு த்தில் இறந்தாள் அதற்குமுன்னமேயே D இறந்துவிட்டான்; B க்கு வேறே சந்ததி கிடையாது B யின் ஜீவதிசைக்குப் பிறகு A யின் சொத்துக்களை a க்கு சகோதரி குமாரனாகிய C ஆக்கிரமித்து ஸ்வாதீனபடுத்திக் கொண்டார். இதன்பேரில் B யின் புருஷன் இறந்த தன் குமாரன் D க்கு a எழுதிவைத்த உயில்படி அவருடைய சொத்து பாத்தியங்கள் கிடைத்து விட்டதென்றும், D யின் ஜீவதிசைக்குப் பிறகு அவன் பாத்தியங்கள் தன் பெண்ஜாதி B க்கு கிடைத்து விட்டதாகவும், அவளுக்குத் தான் நேரான வார்சாகையால் தனக்கு அச்சொத்துக்கள் கிடைக்க வேண்டுமென்றும், E பேரில் வழக்கிட்டார்.

எதிர்வாதம்:—B இறப்பதற்கு முந்தியே D இறந்துவிட்டதால் D க்கு தாவா சொத்தில் எவ்வித பாத்தியமும் ஏற்பட்டதில்லை யென்றும், A யுடைய உயில் ஏற்பட்ட காலத்தில் D பிறக்காததால் அது சட்டப்படி செல்லத்தகுந்த தல்லவென்றும், A யுடைய சொத்துக்களுக்குத் தானே நேரான அனந்தரவார்சு பாத்தியமுடையவனென்றும், E கூறியாடினர்.

தீர்ப்பு:—A யின் ஜீவதிசையில் D பிறக்கவில்லை யாதலால் அவருக்கு தாவா சொத்தில் எவ்வித பாத்தியமு மேற்படவில்லை யென்றும், இந்தியன் செக்ஸெஷனாகட்டு 100-வது செக்ஷனும் அதையனுசரித்து ஏற்பட்ட இந்து வுயில்ச்சட்டமும் இந்த கேசுக்கு எவ்வித பாத்தியமு மேற்படவில்லை யென்றும், E தான் நேரானவாரசென்றும் வாதியின் பிராது தள்ளுபடி செய்யப்பட்டது.



31 சென்னை 310 ஸ்ரீ ராஜா வெங்கட்ட நரசிம்ம அப்பாராவ் பகதூர். அ. வாதி:—ஸ்ரீ ராஜா சுராநேனி வெங்கட புருஷோத்தும ஜெகன்னாத கோபால் ராவ் பகதூர் அ. பிரதிவாதி.

## 6. மாமனார்பேரில் மருமகள் கொண்டுவரும் ஜீவனாம்சவழக்கு.

A தன்னுடைய மனைவி B தன்னுடனிருந்து வாழாமல் தன் தாய்வீட்டுக்குப் போய்விட்டதால் வேறுவிவாகஞ் செய்து சில வருடங்களுக்குப்பின் இறந்தார். அவர் ஜீவதிசையில் B அவரை எவ்வித ஜீவனாம்சமுங் கேட்கவில்லை. அவருடன் கூடி வாழவுமில்லை. A இறந்த பிறகு அவர் தகப்பன் C யிடமிருந்து தனக்கு ஜீவனாம்சம் கிடைக்க வேண்டுமென B வழக்கிட்டாள்.

எதிர்வாதம்:—B தன் புருஷனுடன் கூடி வாழாமையாலும், அவள் தன் புருஷனை விட்டு விலகி வெகு நீண்டகாலமாக தன் தாய் வீட்டிடனிருந்து வந்தமையாலும், அவள் புருஷன் ஜீவதிசையில் எவ்வித ஜீவனாம்சமுங் கேட்படாததாலும், அவள் அது விஷயமா யாதொன்றும் கேட்காதிருந்தமையாலும், இந்த வழக்குக் கொண்டுவர B தடைபட்டிருக்கிறளென்றும், தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டியதென்றும், C கூறியாடினர்.

தீர்ப்பு:—புருஷன் பெண்ஜாதியை சம்ரக்ஷிக்கக் கடமைப் பட்டிருந்தாலும் அவள் தன் புருஷனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யாமல் அவரைவிட்டு விலகியிரும் பட்சத்தில் அவளுக்கு எவ்வித ஜீவனாம்சமுங் கொடுக்க வேண்டிய தில்லையென்றும், அவள் நன்மார்க்க நடையுடையவளாக இல்லாதிருந்து தன் புருஷன் வீட்டுக்கு பின்னால் வந்து இல்லறவாழ்க்கை செய்யும்பட்சத்தில் அவளுக்கு ஜீவனாம்சம் கொடுக்கப்பட வேண்டுமென்றும், A யின் பாக சொத்துக்களை C அடைந்திருப்பதால் அவர் B யை சம்ரக்ஷிக்கக் கடமைப்பட்டவரென்றும், அவள் புருஷன் இறந்து விட்டதால் C யுடைய வீட்டில் அவள் வசிக்க வேண்டியது அவசியமில்லையென்றும், அவள் அக்குடும்பத்தை விட்டு விலகி வெகு நீண்டகாலமாய் விட்ட காரணத்தைக் கொண்டு அவள் அக்குடும்பத்தை விட்டு விலகினவளாக மாட்டாளென்றும், அவளுக்குக் கிரமப்படி ஜீவனாம்சம் கிடைக்கத்தக்கதென்றும் தீர்ப்பு செய்யப்பட்டது.

31. சென்னை 338 குராமபல்லி பங்காரு அம்மணி. அ. வாதி:—குராமபல்லி பிராம லேஸி அ. பிரதிவாதி.

7. சயீப அனந்தர வார்சுகளின் சம்மதியின் பேரில் செய்யப்படும் பாராதீனமும் விதந்து மரணகாலத்திலுள்ள அனந்தர வார்சுகளின் பாத்தியமும்.

A B C D இந்நால்வரும் பாகம்பிரிந்த சகோதரர்கள். A க்கு எவ்வித சந்ததியு மில்லாததால் அவர் சொத்துக்களை யடைந்த அவர் விதந்து E அச்சொத்துக்களில் சிலவற்றை ஷை B C D இவர்களுக்குங் கொடுத்துவிட்டு பாக்கிச் சொத்துக்களைத் தான் தானாதி வினியோகங்கள் செய்யும்படியாக அவர்களிடமிருந்து விடுதலை பத்திரம் வாங்கி அவைகளைத் தனக்கு வேண்டியவர்களுக்குப் பாராதீனஞ் செய்துவிட்டாள். B C D இவர்களின் குமாரர்களான F G Y தாங்கள் ஷை பாராதீனங்களுக்குக் கட்டுப்பட்டவர்களல்லவென்றும், ஷை விடுதலைப்பத்திரம் எவ்விதத்திலும் செல்லத்தகுந்ததல்லவென்றும், E யிடம் வாங்கிய H Y பேரில் வழக்கிட்டார்கள்.

எதிர்வாதம்:—B C D செய்து கொடுத்த பத்திரம் நல்ல எண்ணத்துடனும் தகுந்த பிரதி பிரயோஜனத்துடனேற்பட்டிருப்பதால் அப்பிரயோஜனத்தை யடைந்திருக்கிறும் வாதிகள் அப்பாராதீனங்களை ஆக்ஷேபிக்கக் கூடாதென்றும், அவைகளுக்கு அவர்கள் கட்டுப்பட்டவர்களென்றும் H Y கக்ஷியாடினார்கள்.

தீர்ப்பு:—விதந்துவின் ஜீவதிசையிலுள்ள எல்லா அனந்தர வார்சுகளும் அவள் புருஷன் சொத்தில் தங்களுக்குள்ள பாத்தியதைகளை விடுதலைபத்திரம் மூலமாய் விட்டு அச்சொத்துக்களை யவள் வினியோகஞ் செய்யத்தகுந்த விதமாக சம்மதி கொடுத்துவிட்டால் அந்த அனந்தரவார்சுகளின் கீழ்வார்சுகள் அவர்கள் செய்துகொடுத்த தஸ்தாவேஜிகளை யாக்ஷேபிக்கக் கூடாதென்று ஏற்பட்டிருக்கும் 12 C W N 74 பிரிவிகவுன்ஸல் தீர்ப்பும், அதையனுசரித்து இ. லா. ரி 22 கல்கத்தா 354, 13 சென்னை லா ஜர்னல் 323 இந்த தீர்ப்புகள் ஏற்பட்டிருப்பதால் அவைகளைப்போன்ற இந்த கேஸ் நிற்கத்தகுந்ததல்லவென்று வாதிகளின் தாவா செய்யப்பட்டது.



31 சென்னை 366 புல்பெஞ்சு தீர்ப்பு; தூத்துக்குடி கேஸ் ரெங்கப்பநாயக்கர். அ. வாதி:—கம்டிநாயக்கர் அ. பிரதிவாதி; அப்லம்மாள் அ. வாதி:—எல்லப்பநாயக்கர் அ. பிரதிவாதி.

# தர்ம சொத்துக்களைப் பற்றிய சட்டம்.

மாமூலாக நடத்திவந்த தர்மங்களை நடத்தாமல் தர்ம சொத்துக்களை யபகரித்து வரும் தர்மகர்த்தாக்களை நீக்கி வேறு தக்கவர்களை நியமித்தல்.

ஒரு தர்க்காவின் தர்மகர்த்தர் A என்பவர் அந்த தர்ம சொத்துக்களை சொந்த வுபயோகப்படுத்தி வருவதாகவும், அதனால் மாமூலாக நடத்தப்பட்டுவந்த அனேக தருமங்கள் நின்றுவிட்டனவென்றும, அவ்வித யபகரிக்கப்பட்ட சொத்துக்களும் அவராலுண்டாகிய நஷ்டங்களும் அவரிடத்தில் வசூலிக்கப்பட வேண்டுமென்றும், அவரை தர்மகர்த்தா பாத்தியதையினின்றும் விலக்கி வேறுதக்கவர்களை நியமித்து தருமங்கள் நடத்தப்பட வேண்டுமென்றும், அந்த தர்மங்கள் நடத்தப்பட வேண்டியதில் அக்கரையுள்ள B C D 1895வருத்திய 20-வது ஆக்டுப்படி டிஸ்டிரிக் கோர்ட்டில் A பேரில் வழக்கிட்டார்கள்.

எதிர்வாதம்:—தான் தர்க்காவுக்கு வம்சபாரம்பரையான தர்மகர்த்தா பாத்தியமுள்ளவனென்றும், தன்னை நீக்க எவருக்கும் பாத்தியமில்லையென்றும், வாதிகள் வழக்கிட நியாயமில்லையென்றும், கக்ஷியாடினார்.

தீர்ப்பு:—தர்ம சொத்துக்களை யபகரித்து வரும் தர்மகர்த்தாக்களை நீக்கி வேறுதக்கவர்களை நியமித்து தர்மங்களை நடத்தும்படி வுத்திரவு செய்ய டிஸ்டிரிக்ட் கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டென்றும், அது விபரங்களை இ. லா. ரி 22 சென்னை 223, 18 அலகாபாத் 227 இவைகளில் சொல்லப் பட்டிருப்பதாகவும், புதியதர்மகர்த்தா இ. லா. ரி 10 சென்னை 376 ரூலிங்கிசில் கண்டபடி எலெக்ஷன் பேரில் நியமிக்கப்பட வேண்டுமென்றும், A யிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டியதாக டிக்கிரி யேற்பட்ட தொகை புதிய தர்மகர்த்தா வசூலித்து தர்மங்களுக்கு வுபயோகப்படுத்த வேண்டியதென்றும், தீர்ப்பு செய்யப்பட்டது.

31 சென்னை 212 மியாஜி என்கிற மகம்மது கோஸ்சாகிப் அ. வாதி ஷேக் ஆமெத் சாகிப் அ. பிரதிவாதிகள்

## சீவில் புரிஸீஜர் கோடு.

கோர்ட்டாரால் குறிப்பிடப்பட்ட கெடுவுக்குள் தொகையை கட்டிசாசனம் பெற்றுக்கொள்ளாமை.

திருநெல்வேலி டி - மு. கோர்ட்டு இலாகாவைச் சேர்ந்த ஒரு கிராமத்து நிலத்தை விற்பதாக Aக்கு B ஒரு உடன்படிக்கை யெழுதிக்கொடுத்தார். அந்தப்படி சாசனஞ்செய்து கொடாததால் B பேரில் A வழக்கிட்டதில் சாசனபாக்கித்தொகை ரூபா. 10-யும் டிக்கிரி தேதி முதல் ஒருமாத கெடுவுக்குள் கட்டிவிட்டு சாசனம் பெற்றுக்கொள்ளுகிறதென்று தீர்ப்பு செய்தார்கள். இந்தத் தீர்ப்பு சரியானதல்லவென வாதி அப்பீல் செய்ததில் சப்ஜட்ஜி கீழ் கோர்ட்டார் தீர்ப்பை யுறுதி செய்துவிட்டார். இந்தத் தீர்ப்புக்குப் பிறகு டிக்கிரியில் கண்ட தொகை ரூபா 10-யும் கோர்ட்டில் கட்டி சாசனஞ்செய்து கொடுக்கப்படவேண்டுமென வாதி மனுக்கொடுத்தார்.

கீழ் கோர்ட்டு டிக்கிரியில் கண்ட கெடுப்படி தொகைகட்டாததால் வாதிக்குள்ள சாசனபாத்தியம் ரத்தாய்விட்டதென்றும் பிரதிவாதி சக்ஷியாடினர். அந்த ஆக்ஷேபனையின்படி வாதியின் நிறைவேற்று மனு தள்ளுபடி செய்யப்பட்டது. பிறகு வாதி சப்கோர்ட்டாரிடம் மனுக்கொடுத்து டிக்கிரியில் கண்ட தொகையைக் கோர்ட்டில் கட்ட புதிதாக கெடுச்கண்டு தீர்ப்பைத் திருத்தவேண்டுமெனக் கேட்டார். அந்த மனுவும் நிராகரிக்கப்பட்டது. முனிசிப் செய்த உத்திரவைப்பற்றி சி. பு. கோடு 244-வது செக்ஷன்படி அப்பீல் செய்தார். அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டது. கீழ்கோர்ட்டார்கள் செய்த உத்திரவுகள் ரத்து செய்யப்பட வேண்டுமென வாதி ஹைகோர்ட்டுக்கு அப்பீல செய்தார்.

வாதி தனக்கு ஆதாரமாக எடுத்துக் காட்டும் இ. லா. ரி. 11 அலகபாத் 346, 15, கல்கத்தா 13, 11 பம்பாய் 172. இவைகள் தாவா கேசுக்கு ஒற்றுமையானதல்லவென்றும், சொத்துப்பாதீன சட்டப்படி கொண்டுவரப்படும் கேஸ்களுக்கும் டில் அப்பீல் டிக்கிரிகளுக்கு பின்பும் கோர்ட்டில் தொகை கட்டி சொத்து ஸ்வாதீனஞ் செய்துக்கொள்ளலாமென வேற்பட்டிருக்கிறதேயன்றி தாவா கேசுக்கு அவைகள் எவ்விதத்திலும் ஒற்றுமையானதல்லவென்றும் தாவா கேசில் கீழ் அப்பீல் கோர்ட்டார் கீழ்கோர்ட்டு டிக்கிரியை யுறுதி செய்தவர்கள் அந்த டிக்கிரியில் கண்ட தொகை கோர்ட்டில் கட்டுவதற்கு வேறு கெடு குறிக்கவில்லை யென்றும், அதனால் வாதியின் நிறைவேற்று மனு தள்ளுபடி செய்யப்பட்டது நியாயமானதென்றும், இனி கீழ் அப்பீல் கோர்ட்டார்கள் தங்கள் தீர்ப்புகளை தெளிவாயெழுதவேண்டுமென்றும், வாதியின் அப்பீலை தள்ளுபடி செய்துவிட்டார்கள்.





வெண்ணலேடிக்கிரி கடனுக்காக பெந்தகசொத்துக்களை யுள்படுத்தி யேலம்போடுவேதும் செல்லாது.

Aக்கு B யுடைய ஸ்தாவர சொத்துக்கள் பெந்தகம் வைக்கப்பட்டிருக்கிறது. B பேரில் A ஒரு வெண்ணலே டிக்கிரி பெற்றார். அந்த டிக்கிரியில் தனக்கிருந்த பாத்தியதையை அவர் Cக்கு டிரான்ஸ்வர் செய்துவிட்டபடியால் C அந்த டிக்கிரியை நிறைவேற்ற மனு கொடுத்ததில் Aக்கு பாத்தியமாயுள்ள பெந்தக சொத்துக்களை ஜப்தி செய்து அச்சொத்துக்களை பெந்தகத்தையுள்படுத்தி யேலம் போட்டு தன்னுடைய டிக்கிரித்தொகை வசூலிக்கப்படவேண்டுமெனக் கேட்டார்.

எதிர்வாதம் :—பெந்தகதார் A யிடத்தில் C ஷை டிக்கிரியை டிரான்ஸ்வர் வாங்கி நிறைவேற்றி யிருப்பதால் சொத்துப் பாதீன சட்டம் 67,99, இந்த செக்ஷன்களை யனுசரித்து ஷை தொகையைப் பற்றி அசல் வழக்கிட்டு டிக்கிரி பெற்று பெந்தக சொத்துக்களை யேலவிற்றுமுதல் செய்யவேண்டியதேயன்றி,இப்போது கொடுபட்ட மனு சட்டப்படி செல்லத் தக்குந்ததல்லவென்றும் அது தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றும் B சக்ஷியாடினர்.

தீர்ப்பு :—அசல் டிக்கிரிதாரனுக்கு என்னென்ன பாத்தியா பாத்தியங்களிருக்கின்றனவோ அதே பாத்தியா பாத்தியங்கள் அந்த டிக்கிரியை வாங்கினவருக்குண்டென்று, சி. பு. கோடு 232, 233-வது செக்ஷன்களில் சொல்லப்பட்டிருப்பதால், C யானவர் A யின் ஸ்தானத்திலிருக்கிறானென்றும், A தனக்கு வரவேண்டிய பெந்தக பத்திரத்தைப்பற்றி வழக்கிட்டு டிக்கிரிபெற்று அத்தொகை

க்காகவும் வெண்ணைலே டிக்கிரிக்காகவும் பெந்தக சொத்துக்களை யேலவிற்று முதல் செய்யலாமே யன்றி வெண்ணைலே டிக்கிரி கடனு க்காக தன்பெந்தகத்தையுள்படுத்தி யேலம்போடக்கூடாதாகையால் அதே பாத்தியந்தான் Cக்கு ஏற்பட்டிருக்கிறதென்றும், ஜப்தி செய்தது மட்டில் நியாயமேயன்றி அச்சொத்துக்களை வெண்ணைலே டிக்கிரி கடனுக்காக ஏலவிற்றுமுதல் செய்யக்கூடாதென்றும், உத்திரவு செய்யப்பட்டது.

31. சென்னை 33 ஸ்ரீவரத்தின முதலியார். அ. வாதி.
சீனிவாச முதலியார். அ. பிரதிவாதி.

3. ஏலம் போடப்பட்ட வீடுவசப்படுத்தப்படுவதற்கு முன் அவ வீட்டைப்பிரித்து சாமான்களை யெடுத்துக்கொண்டு போனவர்பேரில் அசல் வழக்கு.

A பேரில் B பெற்ற ஒரு டிக்கிரி கடனுக்காக Aயின் வீடு ஏலம் போடப்பட்டதில் அதை C ஏலத்தில் எடுத்து விட்டார். அந்த வீடு வசப்படுத்தப் படுவதற்கு முந்தியே A. B D. E. F. இந்த ஐந்து பேர்களும் ஷை வீட்டைப் பிரித்து சாமான்களை யெடுத்துப்போய் விட்டதாகவும் அவைகளின் மதிப்புத்தொகை கிடைக்கவேண்டுமென்றும் மேற்கண்ட 5-பெயர்கள் பேரிலும் C அசல் வழக்கிட்டார்.

A. B. இருவரும் ஷை. டிக்கிரியில் சக்ஷிக்காரர்களாக இருப்பதால் அவர்களைப் பற்றினவரையில் அசல் வழக்கு சொண்டுவந்தது செல்லாதென்றும், அந்த இருவர் பெயரையும் பிராதில் அடித்து அவர்களை தாவாவினின்றும் விலக்கிவிடும்படிக்கும், டி. மு. கோர்ட்டார் பிராதை வாபஸ் செய்தார்கள்.

அவ்வித உத்திரவு செய்தது சட்டவிரோதமானதென்று டிஸ்திரிக்ட் கோர்ட்டுக்கு அப்பீல் செய்ததில் டிக்கிரி தாரனாகிய Bயின் ஸ்தானத்தில் C இருக்கிறானென்றும், A பேரில்மட்டில் சி. பு. கோடு 244 செக்ஷன்படி நடவடிக்கைகள் நடத்தலாமாகையால் அவர் பெயரை மட்டில் பிராதில் அடித்து விடும்படி உத்திரவு செய்தார்கள். இந்த உத்திரவு சரியானதல்லவென்று C ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார்.

தீர்ப்பு :—சி. பு. கோடு 244-வது செக்ஷன் தாவாகேசுக்கு எவ்விதத்திலும் ஒற்றுமையானதல்லவென்றும், பிரதிவாதிகள் அக்



கிரமமாகப் பிரவேசித்து சொத்துக்களை வாரிக்கொண்டு போனதா லுண்டாகிய நஷ்டங்களைப்பற்றி வழக்கிட்டிருப்பதால் வாதி கொண்டு வந்திருக்கும் அசல் வழக்கு நியாயமானதென்றும், அதில் சம்மந்தப்பட்ட எல்லோரும் பிரதிவாதிகளாகச் சேர்க்கப்பட வேண்டியது நியாயமானதென்றும், தீர்ப்பு செய்யப்பட்டது.

31. சென்னை 37 கோவிந்தவிதயாபா அம்மா. அ. வாதி.
கோவிந்தவிதஹாஜிகண்டி ஆ. அ. பிரதிவாதிகள்.

4. கீழ்கோர்ட்டு டிக்கிரி அல்லது உத்திரவுகாபிகளுடன் அப்பீல் தாகல்செய்யப்படாமல் பின்னிட்டு அவைகள் தாக்கல் செய்யப்பட்டால் அந்தத்தேதிமுதல் காலாவதி தோஷம்பார்க்கவேண்டுமென்பது.

ஒரு நிறைவேறு மனு நடவடிக்கையில் கீழ் அப்பீல் கோர்ட்டார் Aக்கு விரோதமாக 1906ஞு டிஸம்பர்மீ 20வ உத்திரவு செய்ததின்பேரில் அவர் ஹைகோர்ட்டில் 1907ஞு ஏப்ரல்மீ 6வ. ஹைகோர்ட்டில் அப்பீல் கொடுக்கப்பட்டது. அந்த மனுவுடன் கீழ் கோர்ட்டார் செய்த வுத்திரவு இரண்டு கோர்ட்டு டிக்கிரிகள் இவை கள் தாகல் செய்யப்படாததால் அவைகளைச் சேர்த்துக்கொடுக்கும் படி அப்பீல் மனு வாபஸ் செய்யப்பட்டது. ஷை தஸ்தாவேஜிகள் சீக்கிரத்தில் கிடைக்காததால் 1907ஞு ஜுன்மீ 10வ ஷை மனு தஸ்தாவேஜிகளுடன் திரும்பிக் கொடுக்கப்பட்டது. அது காலாவதி தோஷத்தால் பாதிக்கப் பட்டுப்போய்விட்டதாக ரிஜிஸ்டிரார் அப்பீலை தள்ளுபடி செய்து விட்டார்.

இவ்விதம் ரிஜிஸ்டிரார் செய்தது சட்டவிரோதமானதென்று ஆக்ஷேபித்து புல் பெஞ்சுக்கு விசாரணைக்குக் கொண்டு வரப்பட்டது.

ரிஜிஸ்டிராரிடம் கொடுபடும் அப்பீல்களுக்கு.

1. கிரமமான ஸ்டாம்பு ஒட்டப்பட்டிருக்கிறதா?
2. விஷயங்கள் சரியானவிதிப்படி எழுதப்பட்டிருக்கின்றவைா?
3. அவைகளில் எந்தெந்த விஷயங்கள் சொல்லப்படவேண்டியவைவோ அவைகளெல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றனவா?

4. அவைகளுடன் என்னென்ன தஸ்தாவேஜிகாபிகள் தாகல், செய்யப்படவேண்டியனவோ அவைகளெல்லாம் தாகல் செய்யப்பட்டிருக்கின்றனவா?

5. அவைகள் ஏற்பட்டகெடுவுக்குள் கொடுபட்டிருக்கின்றனவா என்ற ஐந்து விஷயங்களையும் ரிஜிஸ்டரார் கவனிக்கக் கடமைப்பட்டவரென்றும், இவைகளுக்கு விரோதமாக நடந்தால் அப்பீலைத் தள்ள அவருக்கு அதிகாரமுண்டென்றும், கெடுவுக்குள் அப்பீல் மனுமட்டில் தாகல் செய்தால் போதுமானதென்று A சொல்லும் ஆக்ஷேபனைகள் பிரயோஜன மற்றவை யென்றும், உத்திரவு செய்யப்பட்டது.

32. பம்பாய் 14 குனிலால் சேதாபாய்ஜு. அ. வாதிகள் பாரதடாயாபாய் அமூலாக். அ. பிரதிவாதி.

5. ஸ்தாவர சொத்து வசமாவதற்காக டிக்கிரி பெற்றவர் அச்சொத்தை மற்றெருவருக்கு சாசனஞ்செய்தால் அந்திக்கிரயதார் அந்த டிக்கிரியை நிறைவேற்றி சொத்துஸ்வாதீனஞ் செய்யக்கூடாதென்பது.

A யிடமிருந்து சிலசொத்துக்கள் வசமாக வேண்டுமென்று B வழக்கிட்டு டிக்கிரி பெற்றார். பிறகு B அச்சொத்துக்களில் பலவற்றை C. D. இவர்களுக்கு சாசனஞ் செய்து கொடுத்துவிட்டார். அவர்களில் C தன் சாசனத்தில் கண்ட நிலம் தனக்கு வசப்படுத்திக்கொடுக்கப்படவேண்டுமென சி. பு. கோடு 232-வது செக்ஷன்படி நிறைவேற்று மனுக்கொடுத்தார்.

எதிர்வாதம்:—ஷை சாசனம் டிக்கிரி பேடாகாதென்றும் C யின் நிறைவேற்று மனுசட்டப்படி செல்லாதென்றும் Bஜு ஆக்ஷேபித்தார்கள்.

C யின் மனு கீழ்கோர்ட்டாரால் தள்ளுபடி செய்யப்பட்டது. அந்த வுத்திரவைப்பற்றி C டிஸ்டிரிக்ட் கோர்ட்டுக்கு அப்பீல்செய்ததில் C நிறைவேறு நடவடிக்கை மூலமாக சாசன சொத்தை வசப்படுத்திக்கொள்ளலாமென தீர்ப்பு செய்துவிட்டார்கள். இவ்வித தீர்ப்பு சட்ட விரோதமானதென்று B ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார்.



தீர்ப்பு :—தாவாசாசனஞ் செய்த காலத்தில் B டிக்கிரியை நிறைவேற்றி சொத்தை வசப்படுத்தி C க்கு ஸ்வாதீனஞ் செய்து கொடுக்க வேண்டுமென்பதாக வேறு தஸ்தாவேஜீ எழுதிவாங்கியிருக்கவேண்டிய தவசியமென்றும் ஷை சாசனத்தைடிக்கிரி மேடாக எண்ண எவ்வித சட்டாதாரமுமில்லையென்றும், தீர்ப்புசெய்யப்பட்டது.

6. மடாதிபதிகளை பப்ளிக் கோர்ட்டில் தருவித்து சாக்ஷிவிசாரணை செய்தல்.

தருமபுரம் தற்கால மடாதிபதிபேரில் சோமசுந்தர செட்டியாரென்பவர் மாயவரம் டிஸ்டிரிக்ட் முனிசீப் கோர்ட்டில் வழக்கிட்டிருந்ததில் இம்மடாதிபதியின் சாக்ஷியம் அவசியமென்றுதனை அவரை சாக்ஷியாகக்கோறி படிகட்டியிருந்தார்.

அம்மடாதிபதி தானெந்த கோர்ட்டுக்கும் போய் சாக்ஷி சொல்லும் வழக்கம் கிடையாதென்றும், தன்னை அநேக கேஸ்களில் பல கோர்ட்டாரும் கமிஷன்பேரிலேயே விசாரித்திருப்பதாகவும், அந்தப்படியே இப்போதும் விசாரிக்கவேண்டுமென்றும், கேட்டுக்கொள்ள அந்தப்படியே கமிஷன்பேரில் விசாரிக்கும்படி முனிசீப் உத்திரவு செய்தார்.

இவ்விதம் முனிசீப் செய்தது சட்டவிரோதமானதென்று வாதி சார்டர் ஆக்ட்15-வது செக்ஷன் சி. பு. கோடு 622 செக்ஷன் இவைகளின்படி ஹைகோர்ட்டில் ரெவிஷன்மனுக் கொடுத்தார்.

கோர்ட்டிலாஜராக முடியாத சிக்குள்ள அல்லது பலவீன முள்ள புருஷர்களை மட்டில் கமிஷன்பேரில் விசாரிக்க வேண்டுமென்று சட்ட மேற்பட்டிருக்கிறதென்றும், சட்ட விரோதமாக கீழ் கோர்ட்டார் செய்யும் நடவடிக்கைகளில், பிரவேசித்து வுத்திரவு செய்ய ஹைகோர்ட்டாருக்கு அதிகார மிருக்கிறதென்றும், சட்ட விரோதமாக பிரதிவாதியை கமிஷனர் மூலமாய் சாக்ஷியாக விசாரிப்பது சாக்ஷியமாக மாட்டாதென்றும், முனிசீப் தன்னதிகார வரம்பை மீறிச்செய்த வுத்திரவைரத்து செய்திருப்பதாகவுந் தீர்ப்பு செய்தார்கள்.

31 சென்னை 60 சோமசுந்திரஞ் செட்டியார்வு அ. வாதிகள் மாணிக்கவாசக ஞானசம்பந்த பண்டாரச்சன்னதி. அ. பிரதிவாதி.

7. ஒருவருக்குள்ள இருவித பாத்தியங்கள் சி. பு. கோடு 244, 278-வது செக்ஷன்கள்.

A பேரில் B ஒரு டிக்கிரி பெற்றிருந்தார்; A இறந்துவிட்டதால் அவருக்கு வார்சாகிய C யை கக்ஷிக்காறராகச்சேர்த்து டிக்கிரி நிறைவேற்றபட்டதில் C ஆக்ஷேபனை நோட்டீஸ் கெடுவில் ஆஜராகி கக்ஷியாடவில்லை. பின்பு அந்த டிக்கிரி கடனுக்காக சி. பு. கோடு 234-வது செக்ஷன்படி சில ஸ்தாவர சொத்துக்கள் ஜப்திசெய்யப்பட்டன. அச்சொத்துக்கள் தர்ம சொத்துக்களென்றும் அவைகளுக்குத் தான் வம்சபாரம்பரையான தர்மகர்த்தா பாத்திய முடையவரென்றும் தாவா கடனுக்கு அவைகள் கட்டுப்பட மாட்டாதென்றும் C சி. பு. கோடு 278 செக்ஷன்படி பாத்திய மனுக்கொடுத்தார்; அது சம்மரியாக தள்ளுபடி செய்யப்பட்டதின்பேரில் சி. பு. கோடு 283-வது செக்ஷன்படி அசல் வழக்கிட்டார்.

**எதிர் வாதம்:**—வாதியின் தகப்பன் தாவா கடனுக்குக் கட்டுப்பட்டிருப்பதாலும் வாதி அவருக்கு வார்சாக சேர்க்கப்பட்டபோது எவ்வித ஆக்ஷேபனையுஞ் செய்யாததாலும் இப்போது அவர் செய்யும் ஆக்ஷேபனைகள் செல்லத்தகுந்த தல்லவென்றும், உபயவாதிகளும் ஒரே நம்பரில் கக்ஷிக்காரர்களா யிருப்பதால் டிக்கிரி நிறைவேற நடவடிக்கையிலுள்ள விவாதங்கள் சி. பு. கோடு 244-வது செக்ஷன்படி மனுநடவடிக்கையில் தீர்மானிக்கப்பட வேண்டுமென்றும், அசல் வழக்கிட்டது சட்டப்படி செல்லாதென்றும் B கக்ஷியாடினார்

**தீர்ப்பு:**—தாவா சொத்தில் தனக்குள்ள பாத்தியதைகளை ஸ்தாபித்துக்கொள்ள வேண்டியதினிமித்தம் C அசல் வழக்கிட்டிருப்பதால் வாதியின் தாவா கிரமமானதென்றும், வார்சு பாத்தியதைக்கும் தர்மகர்த்தா பாத்தியதைக்கும் மெத்த வித்தியாசங்களிருக்கிறதென்றும், சி. பு. கோடு 244-வது செக்ஷன் இதற்கு ஒற்றுமை யில்லையென்றும், தீர்ப்பு செய்யப்பட்டது.

31 சென்னை 131 புத்ருடீன் சாகிப்பூ அ. வாதி— அப்டல் ரகிம் சாய்பூ அ. பிரதிவாதிகள்.



16

# காலாவதிதோஷ சட்டம்.

1 பாத்தியமனு கோடேட்டு தள்ளுபடி செய்யப்பட்டதைப் பற்றி அசல் வழக்கிட காலாவதி தோஷம்.

கர்னூல் ஜில்லா நந்தியால் டி. மு. கோர்ட்டு இலாகாவைச் சேர்ந்த ஓர் கிராமத்திலுள்ள கிருஷ்ணம்மாள் தன்னுடைய வீட்டை தன சகோதரன் சுப்பாராவுக்கு 1894௵ ஆகஸ்டு௴ 11௳ உயில் மூலகாகக் கொடுத்துவிட்டு 1895௵ பிப்பாவரி௴ த்தில் இறந்துவிட்டாள். இந்த உயில் தேதிக்கு முந்தி ஷை சுப்பாராவ் பேரில் A ஒரு டிக்கிரி பெற்றிருந்தார்; அவர் அந்த டிக்கிரியை நிறைவேற்றி ஷை வீட்டை ஜப்தி செய்ததில் கிருஷ்ணம்மாள் ஷை வீடு தனக்குச் சொந்தமானதென்று பாத்தியமனுக் கொடுத்தாள். அம்மனு விஷயமாக மேல் நடவடிக்கைகள் நடத்த படி கட்டாததால் 1893 வருஷம் ஜூன்௴ 6௳ மனு தள்ளுபடி செய்யப்பட்டது. A யின் டிக்கிரி கடனுக்கு அவ்வீடு ஏலம் போடப்பட்டதில் அதை B ஏலமெடுத்து வசப்படுத்தினார், அதை ஷை கிருஷ்ணம்மாள் மறுபடியும் ஆக்ஷேபித்து மனுக்கொடுத்ததில் அதுவும் விசாரணை யன்னியில் 1894௵ ஜூன்௴ 11௳ தள்ளுபடி செய்யப்பட்டுப் போய்விட்டது. ஷை சுப்பாராவ் தனக்குக் கிடைத்த உயில்ப்படி ஷை வீடு B யிடமிருந்து கிடைக்க வேண்டுமென சில வருடங்களுக்குப் பின் வழக்கிட்டார்.

**எதிர் வாதம்:**—மேற்கண்ட சம்மரியார்டர் ரத்து செய்யப்பட வேண்டுமென ஒரு வருடத்துக்குள் வழக்கு கொண்டுவரப்படாமையால் வாதியின் தாவா காலாவதி தோஷத்துக்கு வுள்பட்டிருக்கிறதென்றும், மற்றுஞ்சில விபாங்கள் கண்டும், B யு ஆக்ஷேபித்தார்கள்.

**தீர்ப்பு:**—கிருஷ்ணம்மாள் கொடுத்த மனுக்கள் எவ்வித விசாரணையுமன்றி தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதால் காலாவதி தோஷ சட்டம் 2-வது ஷிடியூல் 11-வது ஆர்டிகின் தாவா கேசுக்கு எவ்வித வொற்றுமையுமில்லை யென்றும், வாதியின் தாவாவுக்கு எவ்வித காலாவதி தோஷமு மேற்படவில்லை யென்றும் 29 சென்னை 225 ரூலிங்கிசை யனுசரித்து தீர்ப்பு செய்யப்பட்டது.

31 சென்னை 5 சால கப்பாரால் அ. வாதி—கம்சலை திம்மய்யாலு அ. பிரதிவாதிகள்.

**2. இறந்த டிக்கிரிதாரனுக்கு வார்சு நியமஞ் செய்தபின்புதான் டிக்கிரி நிறைவேற்ற வேண்டுமேன்பதவசியமில்லை யென்பது.**

A தனக்கு B C இருவர்களாலும் எழுதிக் கொடுக்கப்பட்ட பெந்தக பத்திரத்தின் பேரில் வழக்கிட்டதில் பெந்தக சொத்துக்களை யேலவிற்று முதல் செய்து தொகை வசூலிப்பதுடன் B, C இருவரையுந் தொடர்ந்தும் தொகை வசூலிக்கிற தென்றும், முன் பெந்தகதார் D க்குச் சேரவேண்டிய பெந்தகத்தொகை பூராவும் A செலுத்திய பின்புதான் அவர் தன் டிக்கிரியை நிறைவேற்றவேண்ண்டுமென்றும், தீர்ப்பு செய்யப்பட்டது.

A இறந்து விட்டபடியால் அவர் மனைவி E 1901 வருஷம் பிப்பரவரிமீ 12உ யில் நிறைவேற்று மனுக்கொடுத்ததில் D க்குச் சேரவேண்டிய பெந்தகத்தொகை செலுத்தப்படவில்லை யென்பதாக அந்த மனுவை தள்ளுபடி செய்துவிட்டார்கள். பின்பு E அந்த டிக்கிரியை F எனபவருக்கு 1901ளு மேமீ த்தில் டிரான்ஸ்பர் செய்துவிட்டாள் ; D யின் பெந்தகத்தொகை 1901ளு அக்டோபர்மீ 29உ யில் கொடுபட்டுத் தீர்ந்துபோய்விட்டது. ப் 1903, 1904 வருடங்களிலும் கடைசியாக 1905ளு மார்சுமீ 21உ யிலும் நிறைவேற்றுமனுக் கொடுத்தார்.

1901ளு பிப்பரவரிமீ 12உ யில் கொடுத்த மனுசட்டப்படிக்கில்லாததால் அந்தத் தேதி முதல் காலாவதி தோஷம் பார்க்கக்கூடாதென்றும், அதனாலும், A யின் விதந்து E யை வார்சாக கோர்ட்டார் அங்கீகரிப்பதற்கு முந்தியே அவள் நிறைவேற்றுமனுக் கொடுத்திருப்பதாலும் அது செல்லாதென்றும் F-ன் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றும் பிரதிவாதிகள் ஆசேஷபித்தார்கள்.

டிஸ்டிரிக்ட் முனிசிப் பிரதிவாதிகளின் ஆசேஷபணைகளைத்தள்ளி F யுடைய மனுப்படி வுத்திரவு செய்தார். இந்த வுத்திரவு நியாயமானதல்லவென்று பிரதிவாதிகள் அப்பீல் செய்ததில் டிஸ்டிரிக்ட் ஜட்ஜி முனிசிப் செய்த வுத்திரவை ரத்து செய்துவிட்டார். இந்த வுத்திரவு சட்ட விரோதமானதென்று F ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார்.



தீர்ப்பு:—D க்குச் சேரவேண்டிய தொகையை கோர்ட்டில் கட்டியபின்புதான் A தன்னுடைய டிக்கிரியை நிறைவேற்ற வேண்டுமென்பதவசியமில்லை யென்றும், A டிக்கிரியை நிறைவேற்றி தொகையைவசூலித்து D க்குச் சேரவேண்டியதை கோர்ட்டில் நிறுத்திவைத்துவிட்டு பாக்கியைப்பெற்றுப் போகும்படி வுத்திரவு செய்யப்படலாமென்றும், A இறந்தவுடன் அவர் பாத்தியம் அவர் விதந்துவுக்குக் கிடைத்துவிட்டதால் அந்த விதந்து சி. பு. கோடு 232-வது செக்ஷன்படி மனுக்கொடுக்கலாமென்றும், கீழ் அப்பீல் கோர்ட்டார் F ன் மனுவைத் தள்ளியது பிசகென்றும், டிக்கிரி நிறைவேற்ற காலாவதி தோஷமில்லையென்றும் F கொடுத்த மனு செல்லத்தகுந்ததென்றும், கீழ் அப்பீல் கோர்ட்டார்செய்த வுத்திரவை ரத்துசெய்துவிட்டார்கள்.

31 சென்னை 77 அளகிரிசாமி நாயுடு அ. வாதி—வெங்கடாஜலபதி அய்யர்லு அ. பிரதிவாதிகள்.

## சொத்துப்பராதீன சட்டம்

**1. பெந்தக டிக்கிரி யுறுதிசெய்யப்பட வேண்டுமேன கோடுக்கும் மனுசட்டப்படி செல்லாமை.**

A பேரில் B பெற்றிருக்க ஒரு பெந்தக டிக்கிரியில் நாலுமாதங் கெடுக்கண்டு 14—2—01. டிக்கிரி செய்யப்பட்டிருந்தது; இந்த டிக்கிரி யுறுதிசெய்யப்பட வேண்டுமென 12—8—1903 ல் கொடுத்தமனு சி. பு. கோடு 235-வது செக்ஷன்படி எழுதப்படாததால் இதைத் திருத்திக்கொடுக்கும்படி வாப்ஸ் செய்யப்பட்டது; அந்தப்படி திருத்திக்கொடாததால் மனுவை தள்ளுபடி செய்துவிட்டார்கள். பிறகு 25—10—05. ல் B நிறை வேறு மனுக்கொடுத்தார்.

**எதிர் வாதம்:**—இந்த மனுவுக்கு காலாவதி தோஷமேற்பட்டுவிட்டதென பிரதிவாதிகள் கூஷியாடினார்கள்.

**தீர்ப்பு:**—வாதிகொடுத்த மனுபாரப்படி. எழுதப்படாவிட்டாலும் அதனால் டிக்கிரிகடன்காரர்களுக்கு எவ்வித விரோதமும் இல்லாதிருக்கிறபடியாலும், கோர்ட்டார் தப்பான அபிப்பிராயங் கொள்ள இடமில்லாதிருக்கிறபடியாலும், இதை சி. பு. கோடு 235-வது செக்ஷன்படி கொடுத்த மனுவாகவே அங்கீகரிக்கவேண்டுமென்றும்

இதில் உறுதிமொழியில்லாததனால் பாதகமில்லையென்றும் உத்திரவு செய்தார்கள்.

31 சென்னை 68 ராமய்யன் அ. வாதிகள்.
காதர்பாஷா சாகிப் அ. பிரதிவாதி.

**2. மூல ஆதிரவுகளை வாங்காமல் பெந்தகபத்திரம் பெற்றவருடைய பாத்தியாபாத்தியங்கள்.**

கோயம்புத்தூர் ஜில்லா உடுமலைப்பேட்டை டி. மு. கோர்ட்டு 1902 ஹு அசல் 808 நெம்பர்வாதி ரெங்கசாமிநாய்க்கர் சில ஸ்தாபர சொத்துக்களின்பேரில் 1897 ஹு ஜனவரிமீ 20உ A யிடத்தில் பெந்தகம் பெற்றார், ஷை சொத்து சம்பந்தமான யாவற்று மூலாதிரவுகளும் வாங்கிக்கொண்டார். ஷை பத்திரம் அது எழுதப்பட்ட தேதியிலேயே ரிஜஸ்டருஞ் செய்யப்பட்டிருக்கிறது. இந்த பத்திரதேதிக்குமுன் 1896 ஹு டிஜம்பர்மீ 21உ A ஷை சொத்துக்களை B க்கு பெந்தகம்வைத்து அதை 1897 ஹு எப்பரல்மீ 21உ ரிஜிஸ்டர் செய்துகொடுத்தார்; B க்கு யாதொரு மூலாதிரவுக்களுங் கொடுக்கப்படவில்லை.

வாதி ரெங்கசாமி நாய்க்கர் தன் பெந்தக பத்திரத்தின்பேரில் வழக்கிட்டதில் B க்கு கொடுபட்ட பெந்தக பத்திரம் முறபட்ட தேதியாக விருந்தாலும் அவருக்கு மூலாதிரவுகள் யாதொன்றும் கொடுபடாததால் அவர் சொத்துப்பராதின சட்டம் 78-வது செக்ஷன்படி அளவுகடந்த அலெக்ஷியத்தினால் அவர் தன்னுடைய முன் பாத்தியங்களை இழந்துவிட்டாரென்றும் வாதியின் பாத்தியமே மேலானதென்றும், இ லா ரி 12 சென்னை 424, 429, 13 சென்னை 383, இவைகளை தனக்கு ஆதாரமாக எடுத்துக்காட்டினார்.

தீர்ப்பு:—சென்னை நகருக்குள்பட்ட ஸ்தாபர சொத்துக்களுக்கு மட்டில் மூலாதிரவுகள் வேண்டியதேயொழிய வெளி ஜில்லாக்களுக்கு வேண்டியதவசியமில்லை யென்றும், ரிஜிஸ்டிரேஷனாக்ட்டுப்படி முன் தேதியுள்ள பெந்தக பத்திரமே மேலானதென்றும், B எந்த காலத்திலும் அலெக்ஷியமாக் வருந்ததில்லை யென்றும், அவருடைய பெந்தகப்பத்திர மேற்பட்ட காலத்தில் மூலாதிரவுகள் A யிடத்திலேயேயிருந்ததென்றும், வாதி தனக்கு ஆதாரமாக எடுத்துக்



காட்டிய லா ரிபோர்ட்டுகள் சென்னை நகரிலுள்ள சொத்துக்களை பற்றினவை யென்றும், அவைகள் [illegible]க்கு எவ்வித முன்பாத்தியங்களையு முண்டுபண்ண மாட்டாதென்றும் தீர்ப்பு செய்யப்பட்டது.

31 சென்னை 7 ரெங்கசாமி நாய்க்கர் அ. வாதி— அண்ணாமலை முதலியா அ. பிரதிவாதிகள்.

**3. பேரிறவலாக பெந்தகம் பெற்றவன் பேரிலேற்படும் நடவடிக்கைகளுக்கு உண்மையான பாத்தியஸ்தன் கட்டுப்படுதல்.**

A தன்னுடைய சில ஸ்தாவர சொத்துக்களை B க்கு முதலிலும் C க்குப் பின்னும் பெந்தகம் வைத்தார். B தனக்குச் சேரவேண்டிய தொகைக்காக A யையும் பின் பெந்தகதாரனாகிய C யையும் சேர்த்து வழக்கிட்டு டிக்கிரிபெற்று அந்த டிக்கிரி உறுதி செய்யப்பட்டபின் பெந்தக சொத்துக்களை யேலமிற்று முதல் செய்தார்; அவைகளை D க்கு ஏலத்திலெடுத்து விட்டார்கள். C க்கு ஏற்பட்ட பெந்தகம் பேரிறவலென்றும், ஷை பெந்தகத்தொகை தனக்கு பாத்தியமுடையதென்றும், முன் பெந்தக டிக்கிரித்தொகையைத் தான் கோர்ட்டில் கட்டத் தயாராயிருப்பதாகவும், தன் பெந்தகப் பத்திரப்படித் தனக்கு தொகை கிடைக்கவேண்டுமென்றும், E யானவர் A B D வு பேரில் வழக்கிட்டார் E யின் தாவாப்படி கீழ் கோர்ட்டார்களிருவருந் தீர்ப்பு செய்துவிட்டார்கள்; இப்படிச் செய்தது சட்ட விரோதமென D ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார்.

தீர்ப்பு:—B வழக்கிட்டு டிக்கிரி பெற்றபின்பு E அந்த டிக்கிரித்தொகையை கோர்ட்டில் கட்ட கடமைப்பட்டபின் ஆக்ஷேபனைகள் சொல்வது சரியல்லவென்றும், E யின் ஸ்தானத்திலிருக்கும் C பேரிலேற்படும் எல்லா நடவடிக்கைகளுக்கும் E கட்டுப்படவேண்டியது நியாயமானதென்றும் D யின் அப்பீலை யங்கிகரித்துத் தீர்ப்பு செய்யப்பட்டது.

30 அலகபாத் 30 கானிஸ்படீமா அ. வாதி— வாலிவுல்லாவு அ. பிரதிவாதிகள்.

# டிரஸ்டு ஆக்ட்டு.

1. கடன் நிர்ப்பந்தத்தில் பிறந்த பிரயோஜனமின்றி செய்து கொடுத்த விடுதலைப் பத்திரம்.

A தனக்கிருந்த சில கடன் நிர்ப்பந்தங்களை முன்னிட்டு சில ஸ்தாவர சொத்துக்களில் தனக்குள்ள பாத்தியதைகளை தன் மகன் B க்கு விடுதலைபத்திர மூலமாய் எவ்விதப் பிரதிப் பிரயோஜனமுமின்றியில் கொடுத்துவிட்டார். B அச்சொத்துக்களை C க்கு விற்றுவிட்டதினால் C தான் பெற்ற சாஸனப்படி தனக்கு சொத்துக்கள் கிடைக்கவேண்டுமென வழக்கிட்டார்.

**எதிர்வாதம்:**—A தனக்கிருந்த கடன் நிர்ப்பந்தங்களை சவுகரியமாக தீர்க்கவேண்டியதினிமித்தம் பிரதி பிரயோஜனமின்றி விடுதலைப்பத்திரஞ்செய்து கொடுத்ததாகவும், தனக்குள்ள பாத்தியங்களை யிழந்துவிட வில்லையென்றும், A கக்ஷியாடினார். A தன்னுடைய கடன்காரர்களை மோசஞ் செய்யக்கருதி மேற்கண்ட பராதீனஞ் செய்ததாக வேற்படுவதால் அவர் சொல்லும் ஆக்ஷேபணைகள் சட்டப்படி செல்லத்தகுந்ததல்லவென்று C வாதித்தார்.

**தீர்ப்பு:**—A எவ்வித கடன்களை மோசஞ்செய்ததாக ருஜுவில்லையென்றும், அக்கிரமமான காரியத்துக்காக சொத்துப்பராதீன மேற்பட்டாலும் குறித்தகாரியம் அக்கிரமமாகாமல் நியாயமாகவே முடிந்துவிடும்பட்சத்தில் அச்சொத்துக்களைப் பெற்றவர் பராதீனஞ் செய்தவரின் நன்மையின்பொருட்டு அவைகளை அவரிடம் திருப்பிக் கொடுக்கக்கடமை பூண்டவரென்றும், டிரஸ்டு ஆக்ட்டு 48-வது செக்ஷன்படி A க்கு B டிரஸ்டியாயிருக்கிறாரென்றும், C யின் தாவா தள்ளுபடி செய்யப்பட்டது.

நாகை சப் கோர்ட்டு 31 சென்னை 97 முனிசாமிமுதலியார். அ. வாதி—சுப்பராயர் ஆ அ. பிரதிவாதிகள்.



# காண்டிராக்ட் ஆக்ட்டு.

1. வரும்படி வசூலைப்பற்றிய ஆக்ட்டு.

A தனக்கிருந்த லேவாதேவியை மைனர் B க்கு உயில்மூலமாகக் கொடுத்துவிட்டு 1904௵த்தில் இறந்தார்; அந்த லேவாதேவிக்கு ஏற்பட்ட 1905–1906 வருஷ வரும்படி வரி A யின் விதந்து C யிடம் வசூலிக்கப்பட்டது; B யால் செலுத்தப்படவேண்டிய வரியை C யிடம் வசூலித்துவிட்டதால் அத்தொகை C யால் கிடைக்கவேண்டுமென C கும்பகோணம் சப்கோர்ட்டு 1906௵ ஸ்மால் 132 நெ. ல் வழக்கிட்டதில் காண்டிராக்ட்டு ஆக்ட்டு 70-வது செக்ஷனை யனுசரித்து வாதி பக்ஷம் தீர்ப்புசெய்துவிட்டார்கள்.

இந்த தீர்ப்பு சட்டவிரோதமானதென்று C ஹைகோர்ட்டில் ரிவிஷன்மனுக் கொடுத்தார்.

**தீர்ப்பு:**—ஷை வரும்படி வரி C கொடுக்கக்கடமைப் பட்டவனென்று கலெக்டர் யாதொரு தீர்மானமுஞ் செய்யவில்லையென்றும், B யின் நன்மையை யுத்தேசித்து C அந்த வரி செலுத்தவில்லையென்றும், வரும்படி வரி வசூலிக்கும் அதிகாரிகளின் அமலுக்குப் பயந்து அவ்வரி C யால் செலுத்தப்பட்டிருக்கிறதென்றும், காண்டிராக்ட் ஆக்ட்டு 69–70 வது செக்ஷன்கள் தாவா கேசுக்கு ஒத்துவ யானதல்லவென்றும், B யின் மனுவை யங்கீகரித்து C யின் தாவா தள்ளுபடி செய்யப்பட்டது.

31 சென்னை 35 மைனர்ராகவனுக்கு கார்டியன் சங்கரசாஸ்திரிகள் வாதி—அலமேலுஅம்மாள். அ. பிரதிவாதி.

# இந்தியன் பிரமாணசட்டம்.

பிரமாணத்தின்பேரில் தீர்ப்பு செய்தல்.

தென்மலையாளத்தைச்சேர்ந்த பாப்பங்காடி டி. மு. கோர்ட்டு 1905௵ 588 நெம்பர் வாதியை சாக்ஷியாக விசாரித்ததில் அவரை சில விஷயங்களைப்பற்றி பிரதிவாதி பிரமாணங்கேட்டார். அதன் பேரில் அவர்களுக்குள் ஒருவித ஏற்பாடுசெய்து கொண்டார்கள்; அதாவது பிரதிவாதி கேட்டபடி வாதி பிரமாணஞ் செய்வதை பிர

திவாதி தடைசெய்தாலும் பிராதுப்படி தீர்ப்புசெய்து விடுகிறதென்றும், வாதி அவ்வித பிரமாணஞ்செய்ய ஆக்ஷேபிக்கும்பட்சத்தில் வாதியின் பிராதுதள்ளுபடி செய்யப்பட வேண்டியதென்றும், உபயவாதிகளும் உடன்படிக்கை செய்துகொண்டார்கள்.

பிறகு வாதி பிரமாணஞ்செய்ய இஷ்டமில்லையென்றும் சொல்லிவிட்டதின்பேரில் ஷை உடன்படிக்கைப்படி வாதியின் பிராதை டி. மு. கோர்ட்டார் எவ்வித விசாரணையுமன்னியில் தள்ளுபடி செய்துவிட்டார்கள்; இந்த டிக்கிரிக்கு அப்பீல்கோர்ட்டாராலும் உறுதி செய்யப்பட்டதின்பேரில் வாதி ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார்.

தீர்ப்பு:—வாதி என்ன காரணத்தினால் பிரமாணஞ்செய்ய முதலில் ஒப்புக்கொண்டார், பிறகு என்ன காரணத்தினால் பிரமாணஞ் செய்யவில்லை, என்ற இந்த விஷயங்களை விசாரித்து ஜட்ஜி தனது அபிப்பிராயங்களை தீர்ப்பி லெழுதலாமேயன்றி வாதியின் பிராதை விசாரணையன்னியில் தள்ளுபடி செய்தது சட்டவிரோதமானதென்று வாதியின் அப்பீலை யங்கீகரித்து ஷை கேசைப்பற்றி புனர்விசாரணையன்னியில் தள்ளுபடி செய்தது சட்ட விரோதமானதென்று வாதியின் அப்பீலையங்கீகரித்து ஷை கேசைப்பற்றி புனர்விசாரணை செய்யும்படி தீர்ப்புசெய்தார்கள்.

31 சென்னை 1 இடக்கோட்டு மன்னார் குட்டியின் மகன் மாதவன், அ. வாதி—இடக்கோட்டு குக்காமிமகன் பாக்குக்குட்டி வு. அ. பிரதிவாதிகள்.

## கிரிமனல் புரிஸீஜர் கோடு.

**1. ஜப்திசெய்யப்போன ச்வில்கோர்ட்டு அமீனு முதலியவர்களை தடுத்து அடித்தகுற்றத்திற்காக கோர்ட்டார் அனுமதியன்னியில் பிராது கொடுக்கலாமென்பது.**

கும்பகோணம் சப்கோர்ட்டு 1905ளு ஸ்மால்காஸ் 2017 நெம்பர்வாதியின் எஜண்டு ஷை டிக்கிரியை நிறைவேற்றி ஜப்தி கட்டளையுடன் பிரதிவாதிகள் வீட்டுக்குப்போய் அவ்வீட்டின் கதவைத் திறக்க எத்தனித்ததில் பிரதிவாதிகள் அந்த அமீனு எஜண்டு முத



லியவர்களை யடித்துத் துன்பஞ்செய்துவிட்டார்கள். அந்த குற்றத்துக்காக அவர்கள்பேரில் இ. பி. கோடு 183, 186, 323, 825 வது செக்ஷன்களின்படி நடவடிக்கைகள் நடத்தும்படி சாங்க்ஷன் கொடுக்கவேண்டுமென்று சப்கோர்ட்டாரவர்களிடத்தில் கி. பு. கோடு 195 வது செக்ஷன்படி மனுக்கொடுத்ததில் ஷை நடவடிக்கைகள் நடத்த கோர்ட்டார் அனுமதி வேண்டியதில்லை யெனமனுவைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

ஷை குற்றங்களைப்பற்றி சப்மாஜிஸ்டிரேட்டாரவர்களிடம் பிராது கொடுத்ததில் சப்கோர்ட்டாரவர்கள் சாங்க்ஷனன்னியில் பிராதை அங்கிகரிக்கக்கூடாதென அதைதள்ளுபடி செய்துவிட்டார்கள்.

சப்ஜட்ஜி செய்தவுத்திரவைப்பற்றி டிஸ்டிரிக்ட் கோர்ட்டுக்கு அப்பீல் செய்ததில் கீழ் கோர்ட்டார் செய்ததே சரியென்று வுத்திரவுசெய்து விட்டார்கள். இதனால் இவ்விஷயங்களைப்பற்றி ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்யப்பட்டது.

தீர்ப்பு:—சர்க்கார் உத்தியோகஸ்தர் செய்தவேலையை தடை செய்த குற்றங்களுக்காக இ. பி. கோடு 183, 186 வது செக்ஷன்களின்படி தனிமையில் நடவடிக்கைகள் நடத்த கி. பு. கோடு 235 - வது செக்ஷன் இடங்கொடுக்குமென்றும், இ பி கோடு 323, 335- வது செக்ஷன்களின்படி நடவடிக்கைகள் நடத்த எவ்வித சாங்க்ஷனும் வேண்டியதில்லையென்றும், ஷை 183, 186 செக்ஷன்களின்படி நடவடிக்கைகள் நடத்த சாங்க்ஷன் வேண்டியதில்லையென்று கீழ்கோர்ட்டார்கள் சொல்லியது சரியல்லவென்றும், ஷை கேசை விசாரித்து முடிவு செய்யும்படி சப்மாஜிஸ்டிரேட்டுக்கு வுத்திரவு செய்தார்கள்.

31 சென்னை 43 கிருஷ்ணபிள்ளை அ. வாதி—கிருஷ்ணகோனன் வு. அ. பிரதிவாதிகள்.

**2. சப்மாஜிஸ்டிரேட் சாக்ஷி விசாரணை செய்த கேசை டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட் செக்ஷன் கோர்ட்டுக்கு அனுப்புதல்.**

கொலை கொடுந்துன்பம் இவ்விரண்டு குற்றங்களுஞ் செய்ததாக சொண்டுவரப்பட்ட ஒருகேசை சப்மாஜிஸ்டிரேட் விசாரித்து போதுமான ருஜுவில்லை யென்றுகேசை தள்ளுபடி செய்துவிட்டார்.

இவ்விதந் தன்னுடைய செய்தது நியாயவிரோதமென்றும், அந்தக் கேசைப்பற்றி புனர் விசாரணை செய்யப்படவேண்டுமென்றும், டிவிஷனல் மாஜிஸ்டிரேட் கி. பு. கோடு 435-வது செக்‌ஷன்படி டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டுக்குத் தெரிவித்தார். அவர் கி. பு. கோடு 436 வது செக்‌ஷன்படி எதிரிகளுக்கு நோட்டீஸ் அனுப்பி அவர்களையும் அந்த நம்பர் கட்டையும் தருவித்துப் பார்வையிட்டு அவர்களை செஷன் கோர்ட்டுக்கு கமிட் செய்துவிட்டார்கள்.

இந்த கேஸ் விசாரணைக்கு எடுக்கப்பட்டதில் எதிரிகள் தங்கள் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டார் கமிட்செய்ய அவருக்கு கி. பு. கோடு 346 வது செக்‌ஷன்படி அதிகாரமில்லையென்றும், அவர் தனக்குக் கீழ்ப்பட்ட சப்மாஜிஸ்டிரேட்டுகளை கமிட் செய்யும்படி உத்திரவுசெய்யமட்டில்தான் அதிகாரமுண்டென்றும் கட்சியாடினார்கள்.

இது விஷயமாய் செஷன் ஜட்ஜிக்கு சந்தேகமுண்டாகி டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட் தானே கமிட்செய்தது செல்லுபடியுள்ளதென இ. லா. ரி. 28 கல்கத்தா 397 ரூலிங்கில் ஏற்பட்டிருப்பதாகவும், சென்னை ஹைகோர்ட்டாரவர்களால் அவ்வித ரூலிங்கொன்றும் ஏற்படவில்லையென்றும், கமிட்செய்த மாஜிஸ்டிரேட் முன்பாக எவ்வித சாக்ஷியமும் ஏற்படாததால் அது கி. பு. கோடு 288 வது செக்‌ஷன்படி செல்லுபடியற்றதென்றும், ஷை மாஜிஸ்டிரேட் முன்பாக எதிரிகளும் விசாரிக்கப்படாததால் அதுவும் கி. பு. கோடு 287 வது செக்‌ஷன் படி சட்டவிரோதமென்றும், இவ்விஷயங்களைப்பற்றி உத்திரவு செய்யவேண்டுமென்றும் ஹைகோர்ட்டாரவர்களுக்கு எழுதினார்கள்.

ஒரு மாஜிஸ்டிரேட் விசாரித்து முடிவுசெய்யாமல் விட்டுவிட்டதை மற்றொரு மாஜிஸ்டிரேட் புனர்விசாரணை செய்யாமல் அந்த ரிகார்டுகளை வைத்துக்கொண்டே மேல் நடவடிக்கைகள் நடத்தலாமென கி. பு. கோடு 350 வது செக்‌ஷனில் சொல்லப்பட்டிருப்பதால் சப்மாஜிஸ்டிரேட் சாக்ஷி விசாரணைசெய்த கேஸை கமிட்செய்ய டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டுக்கு அதிகாரமிருக்கிறதென்றும், கி. பு. கோடு 287, 288 வது செக்‌ஷன்களின் கருத்தும் அதுவேயன்றி வேறல்லவென்றும், செஷன் ஜட்ஜி ஷை கேஸை விசாரித்து முடிவு செய்யலாமென்றும், உத்திரவு செய்யப்பட்டது.



31 சென்னை 40 மங்களூர் செஷன் ஜட்ஜி—மாலிங்காவென்ற சோமப்பா.

# இந்தியன் பெனல் கோடு.

1. அதிகாரமில்லாதவரிடத்தில் தெரிவிப்பது குற்றமாகாதென்பது.

A தன் சொத்துக்களை B ஆ கொள்ளையடித்து விட்டதாக அவ்வூர் வில்லேஜ் மாஜிஸ்டிரேட்டுக்கு C க்குத் தெரிவித்தார். அவர் A சொன்ன விஷயங்களைக்கண்டு சப்மாஜிஸ்டிரேட்டுக்கும் போலீசாருக்கும் தெரிவித்தார். போலீஸ் இனிஸ்பெக்டர் ஸ்தலத்துக்கு வந்து A சொன்ன விஷயங்களைப்பற்றி விசாரித்ததில் A பொய்யானகேஸ் கொண்டுவந்ததாக ருஜுக்கள் ஏற்பட்டன. அதன்பேரில் அவரை இ. பி. கோடு 211 வது செக்‌ஷன்படி தெண்டிக்க குற்றஞ் சாட்டப்பட்டார்.

எதிர் வாதம்:—A தான் பொய்யானகேஸ் கொண்டுவரவில்லையென்றும், கொள்ளைக்கேசைப்பற்றி விசாரிக்க வில்லேஜ் மாஜிஸ்டிரேட்டுக்கு அதிகாரமில்லையாதலால் அவரிடந் தெரிவித்தது குற்றமாகாதென்றும் கட்சியாடினார்.

தீர்ப்பு:—அதிகாரமில்லாதவொருவரிடத்தில் தெரிவிப்பதானது குற்றமாகாதென்றும், சட்டப்படி நடவடிக்கைகள் நடத்தும்படி தகுந்த அதிகாரமுள்ளவொருவரை தூண்டுதல் செய்தது வி. மாஜிஸ்டிரேட்டேயன்றி A அல்லவென்றும், அதனால் A பேரில் இ. பி. கோடு 211 வது செக்‌ஷன்படி குற்றஞ் சாட்டக்கூடாதென்றும் தீர்ப்பு செய்யப்பட்டது.

31 சென்னை 506 சின்னராமண்ணைக் கவுண்டன் அ. வாதி—சக்ரவர்த்தி அ. பிரதிவாதி.

# முனிசிபாலிட்டி சட்டம்.

1. வீட்டைச்சேர்ந்த கோரட்டில் கொட்டகைபோட லைசென்ஸ் வேண்டியதில்லை யென்பது.

காஞ்சீபுரம் முனிசிபாலிட்டிக்குள்பட்ட வீடொன்றின் கூரட்டில் லைசென்ஸின்றியில் கொட்டகை போட்டதாக நரசிம்மாசாரி யென்ற வொருவர் முனிசிபல் ஆக்ட்டு 167வது செக்ஷன்படி சார்ஜ் செய்யப்பட்டார்.

எதிரி அந்தக் கொரடு புறம்போக்கு வீதியில் சம்பந்தபட்டதல்லவென்றும், அதனால் லைசென்ஸ் வாங்கவேண்டிய அவசியமில்லையென்றும், கக்ஷியாடினார்.

முனிசிபல் சங்கத்தார் அந்தக்கொரடு தங்களுக்கு பாத்தியமுள்ளதென்றும், தாங்கள் வெகுநீண்ட காலமாக லைசென்ஸ் கொடுத்து வந்திருக்கிறதாகவும், அது விஷயமாய் எதிரி ஆக்ஷேபிக்கத் தடைப்பட்டிருக்கிறாரென்றும், வாதித்தார்கள்.

நீண்ட காலமாய் [illegible] கொரட்டுக்கு லைசென்ஸ் கொடுபட்டிருக்கும் [illegible] டிவிஷனல் சப்மாஜிஸ்ரேட் எதிரிக்கு அபராதம் விதித்து விட்டார். அது அப்பீலிலும் உறுதி செய்யப்பட்டது. இவ்விதஞ் செய்தது சட்ட விரோதமென்று எதிரி ஹைகோர்ட்டாரிடம் ரெவிஷன் மனுக்கொடுத்தார்.

தீர்ப்பு:— ஷை கொரடுக்கு நீண்டகாலமாக லைசென்ஸ் கொடுபட்டிருக்கும் காரணம் [illegible]க்கொண்டு மட்டில் அக்கொரடு முனிசிபாலிட்டியாருக்குச் சொந்தமாக மாட்டாதென்றும், தெரு புறம் போக்கு[illegible] அவர்களுக்கு பாத்தியமேயன்றி வேறெ பாத்திச்சொத்துக்களுக்கு பாத்திய மில்லையென்றும், அப்பாத்தியா பாத்தியங்களை விசாரிக்காமல் கீழ் கோர்ட்டார் அபராதம் விதித்தது சட்டவிரோதமென்றும் அவர் தீர்ப்பு ரத்துசெய்யப்பட்டது.

31 சென்னை 181 நரசிம்மாசாரி. அ. வாதி—காஞ்சீபுரம் முனிஸிபல் சங்கத்தார். அ. பிரதிவாதி.

Z9. N09 119718

# அறிவிப்பு.

நாளது 1909 இந்திய லா ரிப்போர்ட்டுகள் நாளது வரையில் வெளிவராததால் கோர்ட்டில் கண்டபடி இப்பத்திரிகை பிரசுரிக்கப்படவேண்டுமென்ற அவசியத்தை முன்னிட்டு சென்ற 1908 ௵த்தில் ஏற்பட்ட லா ரிப்போர்ட்டுகளில் முக்கியமான சிலவற்றை பிரசுரித்திருக்கிறோம். நாளது இந்திய ரிப்போர்ட்டுகள் வெளிவந்தவுடன் அவைகள் கிரமப்படி பிரசுரிக்கப்படும்.

A. நடேசபிள்ளை,

வக்கீல்.